# மஸ்ஜிதில் பேணப்பட வேண்டிய சட்டங்கள்
# (அஹ்காம் அல் மஸாஜித் )

[ Tamil – தமிழ் – تاميلي ]

மௌலவி எம்.எம்.முபாரக் பீ.ஏ

2014 - 1435

IslamHouse.com

# أحكام المساجد

« باللغة التاميلية

الشيخ محمد مبارك محمد مخدوم

2014 - 1435

IslamHouse.com

# அஹ்காம் அல் மஸாஜித்

## மஸ்ஜிதில் பேணப்பட வேண்டிய சட்டங்கள்

மௌலவி எம்.எம்.முபாரக் பீ.ஏ.
கபூரியா கல்லூரி அதிபர்

செயலாளர்
அகில இலங்கை ஜாமிஅதுல் உலமா சபை

# முன்னுரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே சகல புகழும் உரித்தாகும். ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் கிளையார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக.

சமூகத்தின் கேந்திர நிலையமாக மஸ்ஜிதுகள் அமைய வேண்டும் என்ற குரல் நீண்ட காலமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதன் மகிமை குன்றி விட்டதென பலரும் கவலைப் படுவதை பார்க்கின்றோம். சன்மார்க்கம் விதித்தவைகளும், விதிக்காதவைகளுமான சடங்குகள் அங்கே நடத்தப்படுகின்றன என்று பேசப்படுகின்றது. அதே நேரம் சில விடயங்களில் மக்கள் சிக்குண்டு கிடக்கின்றனர். இதனை கருத்திற் கொண்டு ஆங்காங்கே கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட விடயங்கள்தொடர்பாக ஒரு புத்தகமேனும் எழுத வேண்டுமென்ற பேரவாவின் விழைவே இச்சிறு நூல். இது எமது சகோதர முஸ்லிங்களுக்கும் ஏனையோருக்கும் பயன் பட எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிக்க வேண்டுமென்று இறைஞ்சுகின்றேன். இதனை சரிபார்த்து மதிப்புரை வழங்கிய அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா பொதுச்செயலாளர் அஷ் ஷெய்க் எச். அப்துல் நாஸர் அவர்களுக்கும், முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களப் பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.ஐ.எம். அமீர் (நளீமி) அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் ஆலோசனைகள் வழங்கிய நண்பர் மௌலவி எம்.எஸ். நூருல் ஹம்ஸா பீ.ஏ. அவர்களுக்கும், இதனை அழகுற அச்சுப் பதிவு செய்த எனது அன்பின் மாணவன் மௌலவி முஹம்மத் நாஜ், முஹம்மத் இம்தியாஸ் அவர்களுக்கும் ஏனையோருக்கும் மன நிறைந்த துஆக்கள் உரித்துடையன.

இவ்வண்ணம்,
மௌலவி எம்.எம்.முபாரக் இப்னு முஹம்மத் மஹ்தூம் ஆலிம்,
அதிபர், கபூரியா அரபுக்கல்லூரி, மஹரகம
அகில இலங்கை ஜாமிஅதுல் உலமாசபை முன்னாள் தலைவர்

# பொருளடக்கம்


1. பள்ளிவாசல்- மஸ்ஜித் என்பது என்ன?
2. ஆரம்ப கால மஸ்ஜிதின் அமைப்பு.
3. தொழுகை நிறைவேற்ற அனுமதிக்கப் படாத இடங்கள்.
4. உலகிலுள்ள மிகச் சிறந்த பள்ளி எது?
5. பள்ளியை கட்டுவிக்கின்றவன் பெறும் வெகுமதி என்ன?
6. மஸ்ஜிதின் பங்களிப்பு என்ன?
7. மஸ்ஜிதின் பணி சீர்குழைந்தது ஏன்?
8. மஸ்ஜிதின் சங்கை பேணப்பட வேண்டும்.
9. அஸ்ஹாபுஸ் ஸுப்fபாf
10. பள்ளிவாசல் பரிபாலகர்கள்.
11. பள்ளிவாசல்களும் இஸ்லாமிய இயக்கங்களும்
12. இஃதிகாப்F
13. பாங்கும் அதன் சட்டங்களும்
14. தொழும் ஒழுங்குகள்

15. கதீப்மாரின் சிறப்பான பணி
16. பள்ளிவாசல் பணி சீராக அமைய நாம் என்ன செய்ய வேண்டும்?
17. பயனுள்ள துஆக்கள்
18. ஐயமும் தெளிவும்
19. மஸ்ஜிதின் பணியை மீட்டெடுப்போம்

# 1. பள்ளிவாசல்- மஸ்ஜித் என்பது என்ன?

மஸ்ஜித் என்ற சொல் ஸுஜூத் என்ற சொல்லிலிருந்து பிறந்த தாதும். மஸ்ஜித் என்றால் ஸுஜூத் செய்யும் இடம் என்பதே கருத்தாகும். இப்புவியிலுள்ள இடங்களில் சிறந்தது அல்லாஹ் வின் வீடுகளான மஸ்ஜித்களாகும் என்பது இறை தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள் வாக்காகும்.

ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்ட போது செய்த முதல் வேலை புனித பள்ளிவாசலை நிர்மாணித்ததாகும். அவர்களும், அவர்களது உத்தம தோழர்களும் சேர்ந்தே அல்லாஹ்வின் அவ் வீட்டைக் கட்டினர். பள்ளி வாசல்தான் ஒரு சமூகத்தின் அடையாளச் சின்னமாக விளங்கியது. இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவிக்கும் செய்தி தெ ளிவு படுத்துகிறது.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قال: أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ إِذَا أَغَزَا بِنَا قَوْمًا لَمْ يَكُنْ يَغْزُو بِنَا حَتَّى

يُصْبِحَ وَيَنْظُرَ فَإِنْ سَمِعَ أَذَانًا كَفَّ عَنْهُمْ وَإِنْ لَمْ يَسْمَعْ أَذَانًا أَغَارَ عَلَيْهِمْ (رواه البخاري)

“அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்தக் கூட்டத்தாரயேனும் முற்றுகையிட எம்மோடு சென்றால் ஸுபஹ் நேரம் வரை காத்திருப்பார்கள். ஸுபஹ் நேரத்திற்கான பாங்கோசை கேட்டால் முற்றுகையிடாதிருப்பார் கள். அது கேட்காத பட்சத்தில் முற்றுகை யிடுவார்கள்.”
(அறிவிப்பவர் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு. ஆதாரம் ஸஹீஹ் புஹாரி.)

இதன் மூலம் பள்ளிவாசல் முஸ்லிம் சமூகத்தின் அடையாளச் சின்னமாக இருக்கின்றது என்பது விளங்குகின்றது. பாங்கோசை கேட்கும் இடம் பள்ளி வாசல்களாகும். எனவே பள்ளிவாசல் அமைந்திருப்பின், அங்கு முஸ்லிம்கள் உள்ளனர், என்பதே பொருளாகும். இப்புவியில் நிர்மாணிக்கப் பட்ட அல்லாஹ்வின் வீடுகளில் முதலாவதானது மக்கா (பக்கா)வில் உள்ளதாகும்.

إِنَّ أَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِي بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِلْعَالَمِينَ (3:96)

*"நிச்சயமாக இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென) அமைக்கப் பெற்ற ஆலயங்களில் முதன்மையானது பக்கா (மக்கா)வில் இருப்பதுதான்."* குர்ஆன் ௩ -௯௬

وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَدًا (72:18)

*"நிச்சயமாக மஸ்ஜிதுகள் எல்லாம் அல்லாஹ்வி(ன் வணக்கத்தி) ற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே அங்கு அல்லாஹ்வுடன் சேர்த்து மற்றெவரையும் அழைக்காதீர்கள்."* என அல் குர்ஆன் போதிக்கிறது. 72 – 18

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டிய முதல் பள்ளிவாசல் தான் கல்விக்கூடமாக இருந்தது. வழிகாட்டும் நிலையமாக மிளிர்ந்தது. படைகள், பட்டாளங்களின் பாசறையாக திகழ்ந்தது. தொழுகை நிறைவேற்றப் பட்டதோடு கல்வி வட்டங்கள் அங்கு செயற்பட்டன. சிறியோரும், பெரியோரும் ஒன்று கூடும் இடமாக அது காணப் பட்டது. அந்த நிலை இன்று இல்லாமல் போய் மஸ்ஜிதுகள் தொழுகை நிறைவேற்றப்படும் இடமாகவும், சில சடங்கு

சம்பிரதாயத்திற்கு உரிய தளமாகவும் மாத்திரம் மாறிவிட்டது வருத்தத்திற்குரியதே.

அதனால் தான், பள்ளிவாசல்களின் தூய்மை பேணப்பட வேண்டும். இணை வைத்தலுக்குக் காரணமாகும் எச்செயலும் அங்கு நடைபெற லாகாது. இணைவைப்போர் பள்ளி வாசலின் பொறுப்பளிகளாக வரவும் கூடாது என ஷரீஆ கூறுகிறது. பள்ளி வாசல் நிர்மாணத்திற்கு கலப்பற்ற தூய எண்ணம் தேவை. சமூகத்தை ஒன்றிணைக்கவுள்ள இடமே மஸ்ஜித். இணை வைக்க உதவியாகவும், சமூகத்தை பிளவு படுத்த வும் செய்யும் இடமாகவும் பள்ளிகள் அமையலாகாது.

அத்தகைய இடம் மஸ்ஜித் எனப்பட முடியாது. அது தீமைக்கு வித்திடும் தலமாகும். இப்படிப்பட்ட இடங்களில் வணக்கம் நிறைவேற்றப் படலாகாது என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும்.

وَالَّذِينَ اتَّخَذُوا مَسْجِدًا ضِرَارًا وَكُفْرًا وَتَفْرِيقًا بَيْنَ الْمُؤْمِنِينَ وَإِرْصَادًا لِمَنْ حَارَبَ اللَّهَ وَرَسُولَهُ مِنْ قَبْلُ وَلَيَحْلِفُنَّ إِنْ أَرَدْنَا إِلَّا الْحُسْنَى وَاللَّهُ يَشْهَدُ إِنَّهُمْ لَكَاذِبُونَ، لَا تَقُمْ فِيهِ أَبَدًا لَمَسْجِدٌ أُسِّسَ عَلَى التَّقْوَى مِنْ أَوَّلِ يَوْمٍ

أَحَقُّ أَنْ تَقُومَ فِيهِ رِجَالٌ يُحِبُّونَ أَنْ يَتَطَهَّرُوا وَاللَّهُ يُحِبُّ الْمُطَّهِّرِينَ (9:107,108)

*“எவர்கள் (விசுவாசிகளுக்கு) தீங்கிழைக்கவும், நிராகரிப்பை பரப்பவும், விசுவாசிகளுக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணவும், முன்னர் அல்லாஹ்வுடனும், அவனுடைய தூதருட னும் யுத்தம் புரிந்தோருக்கு பதுங்குமிடமாக இருப்பதற்கும், ஒரு பள்ளியை கட்டுகின்றார்ளோ அவர்கள் தம் குற்றத்தை மறைத்து நிச்சயமாக நாங்கள் நன்மையையன்றி (தீமையை) கருத வில்லை என்று சத்தியமும் செய்கின்றனர். ஆனால் அல்லாஹ்வோ அவர்கள் பொய்யர்கள் என்று சாட்சி கூறுகிறான். ஆகவே நபியே! நீர் ஒரு போதும் அங்கு தொழ வேண்டாம். ஆரம்ப தினத்திலேயே (அல்லாஹ்வின் பயபக்தியின் மீது) பரிசுத்தமான எண்ணத்துடன் அமைக்கப்பட்ட பள்ளி தான் நீர் நின்று வணங்குவதற்கு மிகத் தகுதியுடையது.”* (9;107-108)

## ஆரம்ப கால மஸ்ஜிதின் அமைப்பு

ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிர்மாணித்த அல்லாஹ்வின்

வீடு மணல் தரையாக, ஈத்தம் இலைகளால் வேயப்பட்டிருந்தது. ஈத்த மரத்தூண்களே அங்கு காணப்பட்டன. வேலைப்பாடுகள், சோடனைகள், அலங்காரங்கள் எதுவும் அந்து காணப் படவில்லை. வீண் விரயமாக எந்த ஒன்றும் செய்யப்பட்டிருக்க வில்லை. ஆனால், ஒரு மஸ்ஜித் மூலம் என்ன நாடப்பட்டதோ அது அங்கு காணப்பட்டது. விசுவாசிகள் மனச் சாந்தி பெறும் இடமாக மிளிர்ந்தது. நாடோ, கோத்திரமோ கௌரவத்தை அளிக்க முடியாது. ஈமானே ஒருவனது கௌரவத்துக்கு அச்சாணி என்ற மூல மந்திரம் அங்கு நிலை நாட்டப்பட்டது. எனவே தான் பாரசீகத்தைச் சேர்ந்த ஸல்மானும், ரோம் தேசத்தை சேர்ந்த ஸுஹைபும், அபிசீனா அடிமை பிலாலும், குரைஷி குலத்தின் அபி பக்கரும் (ரழியல்லாஹு அன்ஹும்) சந்திக்கும் கேந்திர நி லையமாக, பள்ளி விளங்கியது. இஸ்லாமிய பிரச்சாரகர்களை (தாஈக்கள்) உண்டு பண்ணுமிட மாக, தீனை வளர்க்க, ஜிஹாத்துக்குத் தயாராகும் பாசறையாக மஸ்ஜிதுகள் விளங்கின.

அல்லாஹ்வின் வீடான பள்ளியின் பணி சீராக நடை பெறுவதென்பது அதன் பொறுப்பாளர் களில் தங்கியுள்ளது. மஸ்ஜிதுகளின் பொறுப்புக்குத் தகுதியாளர்களை அல்லாஹ்வே குறிப்பிட்டுத் தந்துள்ளான். அத்தகுதியுடையோரே இஸ்லாத்தின்

ஆரம்பப் பள்ளிவாசல்களின் பொறுப்பாளர்களாக இருந்தனர்.

إِنَّمَا يَعْمُرُ مَسَاجِدَ اللَّهِ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَلَمْ يَخْشَ إِلَّا اللَّهَ فَعَسَى أُولَئِكَ أَنْ يَكُونُوا مِنَ الْمُهْتَدِينَ (9:18)

*"எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசித்து, தொழுகையையும் கடைபிடித்து, ஸக்காத்தும் கொடுத்து வருவதுடன் அல்லாஹ்வை யன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கின் றார்களோ அவாகள்தான் மஸ்ஜிதுகளை பரிபாலனம் செய்யக் கூடியவர்கள். இத்தகையோர் தான் நேர் வழியில் இருக்க கூடியவர்கள்."* 9-18

## தொழகை நிறைவேற்ற அனுமதிக்கப் படாத இடங்கள்

தொழுகை ஒரு கடமை என்ற வகையில், அதனை உரிய நேரம் வந்ததும், தான் இருக்கும் இடத்தில்

நிறைவேற்றிக் கொள்ளும் அளவு அனுமதிக்கப் பட்டுள்ளது.

عَنْ جابِرٍ رَضِيَ اللهُ انَّ رَسُوْلَ اللهِ صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ قال: جُعِلَتْ لِيَ الْأَرْضُ طَهُورًا وَمَسْجِدًا (متفق عليه)

"இப்பூமி தூய்மையானதாகவும், தொழுகை நிறைவேற்ற ஏற்ற இடமாகவும் எனக்கு ஆக்கித் தரப்பட்டுள்ளது." அறிவிப்பவர் ஜாபிர் ரழியல்லாஹுஅன்ஹு. ஆதாரம் இருவரும் ஒப்பியது.

அதே நேரம் குறிப்பட்ட சில இடங்களை தொழுவதற்குப் பயன் படுத்தலாகாது என்று நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஹல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறரது வழிபாட்டுத் தலங்கள், கப்ரு ஸ்தானங்கள், மலசல கூடங்கள், ஆட்டுத் தொழுவங்கள், போன்றன தொழுகைக்குரிய இடங்களல்ல.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْأَرْضُ كُلُّهَا مَسْجِدٌ إِلَّا الْمَقْبَرَةَ وَالْحَمَّامَ (رواه الترمذي)

“பூமியில் எல்லா இடங்களும் தொழுவதற் கேற்ற இடங்க ளாகும். அடக்க ஸ்தலங்களையும், கழிவிடங்களையும் தவிர” என நபி ஸல்லல்லாஹு அலைகி வசல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் திர்மிதி)

அழுக்குத் தொட்டிகள், கால்நடை அறுக்கப்படும் இடங்கள், கப்ர் ஸ்தானங்கள் என்பவையும் தொழுகைக்கு ஏற்ற இடங்களன்று.

காதியானி (அஹ்மதி)கள், போராக்கள் ஆகி யோரின் வழிபாட்டு இடங்களிலும், பிற சமய வழிபாட்டுத் தளங்களிலும் தொழுவது கூடாது. அங்கு தொழுகை நிறைவேறினாலும் கூட அந்த வழி தவறியவர்களை ஆதரித்ததாகவே அமையும். அது மஸ்ஜிதுத் தக்வா என்ற நிலையில் உள்ளதும் அல்ல. காதியானி கள் காபிர்களாவர். அவர்கள் பள்ளியென்ற பெயரில் வைத்திருக்கும் இடம் பிற சமயத்தவரது வழிபாட்டு இடங்களைப் போன்றதே. எனவே அங்கு தொழுவதோ, அங்குள்ளோரை பின் தொடர்ந்து தொழுவதோ கூடாது.

இதே போன்று தான் கப்ருகள் உள்ள பள்ளிகளில் தொழுவதும் கூடாது. அவ்விடங்களில் சில வேளை எவரேனும் அடக்கப் பட்டிருக்கலாம். அல்லது அடக்கப்பட்டதாக கற்பனை செய்து கப்ரு கட்டப்பட்டிருக்கலாம். இவை அகற்றப்படும் வரை

அங்கு தொழுவதும் தடுக்கப்பட்டதே. கப்ரை முன்னோக்கித் தொழுவதும் கூடாது.

சில ஊர்களில், பள்ளிவாசலுக்கு அண்மையில் உள்ள மைய வாடிகளில் பள்ளிக்கு முன்புறமாக கிப்லாவை நோக்கி மய்யத் அடக்கம் செய்யப்படுவதுண்டு. இது தவிர்ந்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். கட்டப்பட்ட பள்ளிவாசலின் முன்புறமாக மய்யித்துக்கள் அடக்கப்பட்டிருந்த போதிலும், முன்சுவர் மறைப்பாவே கணக்கெடுக்கப் படுகிறது. இருப்பினும் தொழுப வர்களுக்கு முன்னிலையில் மய்யித்துக்கள் அடக்கப் படாது பார்த்துக் கொள்வதே பள்ளி நிர்வாகங்களின் கடமையாகும். பள்ளி வாசலினுள் கப்ருகள் கட்டப்பட்டிருந்தால், வக்புச்சொத்துக்களில் கட்டப் பட்ட கப்ருகள் உடைக்கப்பட வேண்டும் என்பது ஷாபிஈ மத்ஹபின் தீர்ப்பாகும்.

மேற்கண்டவாறு பள்ளிக்கு அண்மையில் மையவாடிகள் அமைவதால், பள்ளி விஸ்தீரணத் தின் போது பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டி வரும். எனவே பள்ளியை விட்டும் தூரமான இடத்தில் மையவாடிக்கென புறம்பான ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொள்வதே முறையாகும்.

## உலகில் உள்ள மிகச் சிறந்த பள்ளி எது?

இஸ்லாத்தின் தூது உலகெங்கும் பரந்து வியாபித்து வந்த நாள் முதல் இன்றுவரை எத்தனையோ விதத்தில் மஸ்ஜிதுகள் கட்டப் படுகின்றன. அவை விதம் விதமாக அலங்கரிக்கப் பட்டும் வந்துள்ளன. அதில் வித்தியாசங்கள் ஏற்படலாம். பள்ளி வாசல் எவ்வளவு தூரம் விசாலிக்கபட்டாலும், பிரபல்யப் படுத்தப் பட்டாலும், ஒன்று மற்றொன்றுக்கு சமனேயாகும். அவைகளை நாடி புனித யாத்திரை மேற்கொள்ள லாகாது.

ஆனால் மூன்று பள்ளிகள் இதிலிருந்து விதிவிலக்கு பெறுகின்றன. இம்மூன்றையும் நாடியே ஒருவன் புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

عَنْ أَبِيْ سَعِيدٍ الْخُدْرِيَّ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: "لَا تُشَدُّ الرِّحَالُ إِلَّا إِلَى ثَلَاثَةِ مَسَاجِدَ مَسْجِدِ الْحَرَامِ وَمَسْجِدِي هذا وَمَسْجِدِ الْأَقْصَى (رواه البخاري)

“மூன்றே மூன்று மஸ்ஜிதுகளுக்கன்றி (புனித) யாத்திரை மேற் கொள்ளப் படலாகாது.

அவையாவன, (மக்காவிலுள்ள) மஸ்ஜிதுல் ஹராம், (மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவி, எனப்படும்) என்னுடைய பள்ளி, (ஜெரூசலத்திலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா" என்பவையாகும்." ஆதாரம் புஹாரி.

இறுதித் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதன் மூலம், புவியிலுள்ள பள்ளிகளில் சிறந்தவை இம்மூன்றை மாத்திரமே நாடிச் செல்ல அனுமதி அளிக்கப் பட்டுள்ளது என்பதனையும் விளக்கினார்கள். நன்மைகளை பொருத்தவரையும் இம்மூன்றுக்கும் வித்தியாசப் பட்ட தனித்தனி நன்மைகள் உண்டு. உலகின் மற்றெல்லாப் பள்ளிகளும் நன்மையில் சரிசமமான வையாகும்.

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ "صَلَاةٌ فِي مَسْجِدِي هَذَا أَفْضَلُ مِنْ أَلْفِ صَلَاةٍ فِيمَا سِوَاهُ إِلَّا الْمَسْجِدَ الْحَرَامَ وَصَلَاةٌ فِي الْمَسْجِدِ الْحَرَامِ أَفْضَلُ مِنْ مِائَةِ أَلْفِ صَلَاةٍ فِيمَا سِوَاهُ"

(مسند أحمد)

"எனது பள்ளியில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை அல் மஸ்ஜிதில் ஹரமைத் தவிரவுள்ள

ஏனைய பள்ளிகளில் நிறை வேற்றப்படும் ஆயிரம் தொழுகைகளை விட ஏற்றமுடையதாகும்.. அல் மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஏனையவற்றில் நிறைவேற்றப்படும் ஒரு இலட்சம் தொழுகைகளை விட ஏற்றமுடைய தாகும்." என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லா ஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்." (அறிவிப்பவர் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு. ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

## பள்ளியை கட்டுவிக்கின்றவன் பெறும் வெகுமதியென்ன?

மனிதன் கட்டியெழுப்புவனவற்றில் சிறந்தது மஸ்ஜிது களாகும். தனக்குச் சொந்தமான செல்வத்தால் கட்டப் படும் ஒரு பள்ளிக்குப் பிரதியாக அல்லாஹ் அவனுக்கு சுவனத்தில் ஒரு மாளிகை வெகுமதியளிக்கிறான்.

عَن عُثْمَانَ بْنَ عَفَّانَ رضي الله عنه قال: سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ مَنْ بَنَى مَسْجِدًا لِلهِ بَنَى اللهُ لَهُ بَيْتًا فِي الْجَنَّةِ (متفق عليه)

“அல்லாஹ்வுக்காக பள்ளியொன்றைக் கட்டுகின்றவனுக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை கட்டுகின்றான்’” என ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல்ம் அவர்கள் சொல்லக் கேட்டேன்.” (அறிவிப்பவர் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு. இருவரும் ஒப்பியது.)

ஹலாலான பணம், தூய்மையான எண்ணம், பாராட்டை எதிர் பார்க்காதிருத்தல் என்பனவே மேற்கூறப்பட்ட வெகுமதியை ஈட்டித்தர வல்லன என்பதை நாம் அறிய வேண்டும் சில சந்தர்ப்பங்களில் நாம் செல்வந்தருக்கு மாத்திரம் தான் மேற் கூறிய வெகுமதியை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பிருக்கின்றது என்று எண்ண இடமுண்டு. ஆனால் சாதாரண தரத்தில் உள்ள ஒரு மனிதன்கூட குறித்த வெகுமதிக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ள முடியும் என்பதை நாம் அறிய வேண்டும்.

عَنْ أَبِيْ ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قال : مَنْ بَنَى للهِ مَسْجِدًا وَلَوْ كَمَفْحَصِ قَطَاةٍ بَنَى اللهُ لَهُ بَيْتًا فِي الْجَنَّةِ" (رواه ابن حبان)

“காடைப் பட்சி முட்டையிடும் இடத்தின் அளவேனும் (பங்கெடுத்து) ஒருவன் அல்லாஹ்

வின் பள்ளியொன்றை கட்டுவானாயின் அவனுக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீடு கட்டுவான்” என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு லைஹி வஸல்லம் அவர்கள் கூறி யுள்ளார்கள். (ஆதாரம் ஹிப்பான்)

இதன் மூலம் எவரும் இந்த அரிய நன்மையை ஈட்டிக் கொள்ள முடியும் என்பதை விளங்க முடிகின்றது. பள்ளி கட்டி நன்மை தேடும் பாக்கியம் சாதாரன ஒரு ஏழைக்கும் கிடைக்க வேண்டும் என்பதனால தான் காடைப் பட்சி முட்டையிடும் இடத்தின் அளவு என்று கூறப்பட்டிருப்தை நாம் அவதானிக்க வேண்டும்.

## மஸ்ஜிதின் பணி என்ன?

மனிதனது உறுப்புளில் மிகச் சிறந்தது அவனது சிரசாகும். அதனை அவன் யாருக்கும் தாழ்த்தவோ, அதன் மூலம் சாஷ்டாங் கம் செய்யவோ கூடாது. அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ் வுக்கு மாத்திமே அது பணிக்கப் பட வேண்டும். அதற்கான இடம் தொழுமிடமாகும். உண்மை விசுவாசிக்கு அடையாளம் பள்ளி வாசல் தொடர்பாகும்.

عَنْ أَبِي سَعِيدٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ "إِذَا رَأَيْتُمْ الرَّجُلَ يَتَعَاهَدُ الْمَسْجِدَ فَاشْهَدُوا لَهُ بِالْإِيمَانِ" (رواه ابن ماجه والترمذي)

"ஒருவர் பள்ளி வாசலோடு தொடர்ப்பு வைத்திருப்பதை (நீங்கள்) கண்டால் அவர் ஒரு மூமின் (ஈமான்தாரி) என்று சாட்சி பகருங்கள்." என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர். அபி ஸஈத் அல் குத்ரி. ஆதாரம் இப்னு மாஜா, திர்மிதி)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹித ஸல்லம் அவர்களது காலத்தில் இருந்த மக்களது தொகைக்கேற்ப பள்ளி வாசலின் பங்களிப்பு பரந்து காணப்பட்டது.

- இஸ்லாத்தில் சேர விரும்பி வருவோரை அல்லது ஏதேனும் உடன்படிக்கைகளை செய்துகொள்ள வரவோரை வரவேற்கும் இடமாக மஸ்ஜித் அமைந்திருந்தது.
- ஸகாத், ஸதகா, உதவி உபகாரங்கள் என்பன சேமிக்குமிடமாக இருந்தது.
- எந்த வசதியுமற்ற மக்கள் தங்கி நிற்குமிடமாக மஸ்ஜிதுகள் அமைந்திருந்தன. அஸ்ஹாபுஸ்

ஸுப்பா (திண்ணைவாசிகள்) என்போர் அத்தகையவர்களேயாவர்.

- யுத்தகளத்தில் காயப் பட்டு வருவோருக்கு சிகிச்சையளிக்கப் படும் இடமாகவும் மஸ்ஜித் அமைந்திருந்தது.
- கல்விப் போதனைகள் நடாத்தப் படும் இடமாகவும் அது அமைந்து இருந்தது.

எனவே பள்ளியின் பணி விசாலமான ஒன்று என்பதை நாம் அறிய முடிகின்றது. சமூகத்தின் சகல துறைக்கும் அது பயன் படுத்தப்பட வேண்டும் என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நடைமுறை போதிக்கின்றது. அதிலிருந்து தான் புனித யுத்தங்களுக்காக படைகள் கிளம்பின. சன்மார்க்க போதனா வகுப்புகள் நடைபெற்றன. இப்படியான உயர்ந்த பணிகளை தந்த பள்ளி – மஸ்ஜிதின் பங்களிப்பை மீண்டும் நாம் அடையலாமா? ஏன் அதன் பணி சீர்குலைந்தது?

## மஸ்ஜிதின் பணி சீர் குழைந்நது ஏன்?

மேலே நாம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டுவித்த பள்ளியின் பிரதான  பணியைப் பார்த்தோம். காலப்போக்கில் இஸ்லாமிய அரசின் விரிவும், சனப்பெருக்கமும்,  மஸ்ஜிதின் பணி பற்றிய தெளிவின்மையும் அதன் சீரான பணியை குளறுபடி செய்து விட்டது. இஸ்லாமிய மக்கள் கூடுதலாக வாழும் நாட்டில் இஸ்லாமிய ஆட்சி முறை இல்லாமல் போனதும், முஸ்லிம்கள் குறைவாக - சிறு பான்மை யாக உள்ள நாடுகளில் அரசியல் தலையீடுகளும் மஸ்ஜிதுகளின் பணி செயலற்றுப்போக காரணமாயிருந்தது எனலாம்.

மஸ்ஜிதுகள் சமூகத்திற்கு செய்த பங்களிப்புகள் குன்றிய மையை பார்க்கின்ற போது இஸ்லாத்தின் எதிரிகளது திட்டம் எவ்வளவு தூரம் மிகைத்து விட்டது என்பதை நாங்கள் ஈண்டு கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட சில மணி நேரம் திறந்து வைக்கப் படும்  இடமாகவும் எமது தீன் அனுமதித்த, அனுமதிக்காத சில விழாக்களையும் சடங்குகளையும் கொண்டாடும் இடமாகவும் மஸ்ஜிது திசைத் திருப்பப் பட்டது. டாக்டர் அப்துல் ஹமீத் மஹ்மூத் பள்ளி வாசல்களின் அணி ஏன் சீர்குழைந்தது? அதன் மூலம் முஸ்லிம் சமூகம் அடைந்த வீழ்ச்சி யாது? என்பதை பற்றிக் கூறும் போது பின் வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

"இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் சின்னங்களாக மஸ்ஜிதுகள் அமைந்திருக்கின்றன. ஆனால் முஸ்லிம் அல்லாதவர்கள் செய்த சதித் திட்டத்தில் முஸ்லிம்கள் மாட்டிக் கொண்டதால் மஸ்ஜிதுகளின் உயிரோட்டம் இல்லாமல் போய்விட்டது. மஸ்ஜிது களின் உயிரோட்டம் என்பது சிறிய காரியங்களிலும், பெரிய விடயங் களிலும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழி காட்டியது போன்று நடத்தலாகும். மஸ்ஜிதுகளின் உயிரோட்டம் இல்லையெனில் முஸ்லிம்களின் ஆத்மீக, லௌகீக நடத்தைகளிலும் நற்பெயர்கள் யாவும் மாற்றடைந்து விடும்."
(இஸ்லாமிய நாகரீகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – பக்கம் கூச)

ஆகையால் மஸ்ஜிதுகள் மூலம் எதிர்பார்க்கப் படும் அணி சீராக அமையச் செய்வது சமூகத்தின் ஒரு பெரிய பொறுப்பாக உள்ளது. முஸ்லிம்களின் கேந்திர நிலையம் பள்ளி வாசல் என்று பறை சாற்றும் நாம், அதன் சீரான அணியை மீட்டெடுக்க என்ன செய்யலாம் என்பதை ஆராயும் தருணம் வந்து விட்டது. அரசியல் தலையீடுகளும், இயக்க வெறிகளும் சமூகத்தை சின்னா பிண்ணப் படுத்தியது போல் அதன் தாக்கம் பள்ளிகளிலும் பிரதி பலித்து உள்ளது.

இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் பள்ளிகள் இயங்கியது போன்று

தற்போது  இயங்க முடியா விடினும், அல்லாஹ் கூறிய வண்ணம் அதன் நிர்வாகம் இடம் பெறுமாயின் ஓரளவேனும்  அதன் பணியைத் திறன் படுத்தலாம். ஆதலால் தான் பள்ளிவாசல் நிர்வாகம் அல்லாஹ்வை முற்றிலும் ஏற்று, செயற்படுபவர்களிடமே இருந்து  வரவேண்டமென ஷரீஆ வலியுறுத்து கின்றது. அல்லாஹ்வின் வீடுகளான மஸ்ஜிதுகளின் பொறுப்புதாரிகள் பற்றி கூறும் அல் குர்ஆன் பின்வருமாறு பிரகடனப் படுத்துகின்றது.

إِنَّمَا يَعْمُرُ مَسَاجِدَ اللَّهِ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَلَمْ يَخْشَ إِلَّا اللَّهَ فَعَسَى أُولَئِكَ أَنْ يَكُونُوا مِنَ الْمُهْتَدِينَ (9:18)

*“எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசித்து, தொழுகையையும் கடைபிடித்து, ஸகாத்தையும்  கொடுத்து வருவ துடன் அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படா மலும் இருக்கின்றார்களோ, அவர்கள் தாம் அல்லாஹ்வின் பள்ளிகளை பரிபாலனம் செய்ய தகுதி யுடையவர்கள். (முஃமினான) இத்தகைய வர்களே நேரான வழியிலிருப்பவர்கள்.”* (9;18)

அல் குர்ஆன் குறிப்பிடும் இலட்சனங்களை உடையவர்கள் மூலமே பள்ளி வாசல்களின் உண்மையான உயிரோட்டத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும். குறித்த வரைவிலக்கணம் இல்லாத நிலையில் நிர்வாகிகளாவோர் மூலம் சில வேளை மார்க்கத்துக்கு முரனானவைகள் கூட பள்ளிகளில் நிகழ்வதை பார்க்கின்றோம். உண்மை பேசப்பட வேண்டிய இடத்தில் பொய்யும், ஸுன்னத்தை உயிர்பிப்பதற்கு பதிலாக "பித்அத்து" களும் காணப்படுகின்றன. அதன் மூலம் நற்குண, நற்பண்பாடுகள் குறைந்த ஒரு சமூகமாக முஸ்லிம்கள் திகழ்கின்றனர்.

பள்ளிவாசல் தொழுகைக்கு மாத்திரம் உரிய இடம் என்ற உணர்வு ஊட்டப் படுகின்றது. நற்குண, நன்னடத்தை உள்ள முஸ்லிம்களின் பயிற்சிக் கூடமாவே பள்ளி வாசல்கள் இருந்தன என்ற வரலாற்று உண்மைகள் நினைவிற் கொண்டு நாம் செயற் பட வேண்டும். பள்ளி வாசல்கள் தொழுகைக்கு மாத்தரம் உரிய இடமல்ல. அது ஒரு சமூகத்தின் கேந்திர நிலையம் என்று உணர்த் தப் படவேண்டும். அதன் மூலமே நற்குண, நற் பண்பாடுகள் உள்ள சமூகமாக நாம் திகழலாம்.

எனவே அல்லாஹ்வின் இல்லங்களான பள்ளி வாசலின் பொறுப்பை மேற்கண்ட தன்மை

களும், தகுதியும் கொண்டோரே ஏற்கவேண்டும். அரசியல் செல்வாக்கு, அதிகாரம், பரம்பரை ஆதிக்கம் என்பவைகள் அடிப்படைத் தகைமை களாக கொள்ளப் படலாகாது. அப்படி அவை களுக்கு முத்தியத்துவம் அளிக்கும் பட்சத்தில் தனிப்பட்டோரது விருப்பு, வெறுப்புக்கே பள்ளி வாசல் இயங்க நேரிடும். இதனால் சகல விதமான பாதிப்புகளையும் சமூகம் எதிர்கொள்ள வேண்டி வரும். அல்லாஹ் குறிப்பிட்ட இலட்சணங்களை உடையவர்களே அவனது வீடாகிய பள்ளி வாசலின் காவளர்களாவர் என்பதையே நம் சமூகம் உணரக் கடமை படுகிறது.

## மஸ்ஜிதின் சங்கை பேணப்பட வேண்டும்

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்காக நிர்மா ணிக்கப் படும் புனித தலமாகும். அதற்கென தனிச் சிறப்புண்டு. அதற்கென சங்கையுமுண்டு. அது பேணப்பட வேண்டும். எவருடைய தனி அதிகாரமும் அங்கு இருக்கலாகாது. சமூகத்தை ஒன்றிணைக்கும் இடமாக அது இருந்து வர வேண்டும். மஸ்ஜிதின் சங்கையை பேணுவதில் மிகப் பிரதானமனானது அதனை அழுக்கடையச் செய்யாது தூய்மையாக வைத்திருப்பதாகும்.

அங்குள்ள சிறிய ஒரு அசுத்தத்தையேனும் எடுத்து வீசுபவனும் பெருத்த கூலியைப் பெறுகின்றான்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ "عُرِضَتْ عَلَيَّ أُجُورُ أُمَّتِي حَتَّى الْقَذَاةُ يُخْرِجُهَا الرَّجُلُ مِنْ الْمَسْجِدِ" (رواه الترمذي)

"பள்ளியிலிருந்து ஒருவன் எடுத்தெறியும் அசுத்தம் உட்பட எனது உம்மத்தவர்களுக்கு வழங்கப்படும் கூலியெல்லாம் எனக்கு எடுத்து காட்டப்பட்டது." என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் திர்மிதி)

மேலும் ஒவ்வொரு கோத்திரத்தார் (கபீலாக்கள்) வாழுமிடங்களிலும், பள்ளிகள் கட்டு மாறும் அதனை சுத்தமாக வைத்துக் கொள்ளு மாறும், நறுமணம் கமழச் செய்யுமாறும் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள். ஆதாரம் அபு தாவூத்.

குறிப்பாக வெள்ளிக் கிழமை நாற்களில் நறுமணம் கமழச் செய்வது கடமையாகும்.

أَنَّ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ أَمَرَ أَنْ يُجَمِّرَ مَسْجِدُ الْمَدِيْنَةِ كُلَّ جُمُعَةٍ حِيْنَ يَنْتَصِفُ النَّهَارُ (زاد المعاد ج 1 ص 112 )

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜும்ஆ நேரத்தில் மதீனா பள்ளிவாசலில் நறுமணம் கமழச் செய்யுமாறு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கட்டளையிட் டார்கள்.(zஸாதுல் மஆத் 1 –112 )

எனவே பள்ளியின் சங்கை அதனை தூய்மையோடு வைத்திருப்பதில் தான் உள்ளது என்பதை விளங்க முடிகின்றது. அங்கு நுழைகின்ற வர்களும் அங்கிருந்து வெளிக் கிளம்புவோரும் குறிப்பிட்ட துஆக்களை ஓதுவதன் மூலம் பள்ளி யின் சங்கையை பேணவேண்டும். பள்ளிக்குள் செல்கின்றவன் வுழுவுடன் செல்வதே முறையாகும். பெருந் தொடக்குடையவன் உற்செல்லவோ, அங்கு தரிக்கவோ அறவே கூடாது. உள்ளே சென்றவர் பள்ளிக்குரிய காணிக்கை எனப்படும் (தஹிய்யதுல் மஸ்ஜித்) தொழுகயை நிறைவேற்ற வேண்டும்.

மஸ்ஜித் எப்போதுமே அமைதியும், அடக்கமும் காணப்பட வேண்டிய ஓரிடமாகும். அங்கு எந்த ஒரு சப்தமும் உயர்த்தப் படலகாது.

வியாபார விளம்பர இடமாகவோ, காணாமற் போன பொருட்களை தேடுமிடமாகவோ வைத்துக் கொள்ளக் கூடாது. நறுமணம் கமழுமிடமாக இருக்க வேண்டிய இடத்துக்கு வெள்ளைப் பூடு, வெங்காயம் போன்ற துர்வாடை வீசுபவற்றை உண்டவர்கள் நெருங்கவும் கூடாது. அதே போன்று புகை பிடிப்ப வர்களும் நெருங்கவும் கூடாது. இவ்வாறு ஷரீஅத் வகுத்துத் தந்த முறைகளை பேணுவதன் மூலமே நாம் பள்ளியின் சங்கையை பேணியவர்களாக ஆக முடியும்.

பள்ளி வாசலின் சங்கை பேணப்பட வேண்டும் என்ற நோக்கத் துக்காகவே நம் முன்னோர் உட் பள்ளி வெளிப்பள்ளி யென்று இரண்டாக வகுத்துப் பயன் படுத்தினர். சில செயல்களை உட் பள்ளியில் செய்வதை விட்டும் தவிர்ந்து கொண்டனர். அதன் மூலம் பள்ளியின் சங்கையை பேணிப் பாதுகாத்தார்கள். அவை எந்த அளவென்றால் கடந்த காலங்களில் பள்ளியின் உட் பகுதியை மாத்திரம் வக்பு செய்து வெளிப்பகுதியை பொதுப் பாவணைக்கு விட்டு விட்டார்கள்.

இவ்வாறு பேணப்பட்ட சங்கைகள் ஒன்றுமே காணப் படாத இடமாக, படுக்கை அறைகளாக பள்ளிவாசல்கள் இன்று காட்சி தருகின்றன. பள்ளி வாசலின் உட் பகுதியில் நித்திரை கொள்பவர் கள்

குளிப்பு கடமையாகி விட்டாலும் கூட படுத்து உறங்கிக் கொண்டிருப்பதையும் சில சமயங்கள் பார்க்கிறோம். பீடி, சிகரட் முதலியவற்றையும் தம்மோடு  பள்ளியினுள் சுமந்து வருகின்றனர். புகை பிடிப்பது ஹராம் என்பது இவர்களது அவதானத்தில்  எட்டு வதில்லை.  துர்வாடையோடு வரும் இவர்கள் செயலால் மலக்கு களும், மனிதர்களும் வேதனை அடைகின்றனர்.

## அஸ்ஹாபுஸ் ஸுப்பா

இந்தச் சொல் திண்ணை வாசிகள் என்று பொருள் குறிக்கிறது. தங்குமிட வசதி, குடும்பம் அற்ற பரதேசிகள் ஒதுங்கிக் கொள்ளும் இடமாக மஸ்ஜிதுன் நபியின் பின்பிறமாக இருந்த இடம் “அஸ் ஸுப்பா” எனப்படுகிறது. ( பத்ஹுல் பாரி கூ-695)

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இருந்த தோழர்களில் சிலர் அன்னாரது பள்ளிவாசலுக்கு வெளியே ஒரு இடத்தில் தங்கியிருந்தனர். அவர்கள் வீடு, வாசல்களோ, குடும்பத்தவரோ இல்லாத பரம ஏழைகளாவர். கிடைப்பதை உண்டு வாழ்ந்த அவர்கள் ரஸூலுல்லாஹ் அவர்களது போதனை

களை நேரடியாக செவியேற்கவும், பார்க்கவும் பாக்கியம் பெற்றனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் எழுபது அல்லது இதை விட சற்றுக் கூடியதாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: "لَقَدْ رَأَيْتُ سَبْعِينَ مِنْ أَصْحَابِ الصُّفَّةِ مَا مِنْهُمْ رَجُلٌ عَلَيْهِ رِدَاءٌ إِمَّا إِزَارٌ وَإِمَّا كِسَاءٌ قَدْ رَبَطُوا فِي أَعْنَاقِهِمْ فَمِنْهَا مَا يَبْلُغُ نِصْفَ السَّاقَيْنِ وَمِنْهَا مَا يَبْلُغُ الْكَعْبَيْنِ فَيَجْمَعُهُ بِيَدِهِ كَرَاهِيَةَ أَنْ تُرَى عَوْرَتُهُ" (رواه البخاري)

"70 திண்ணைத் தோழர்க்களக் கண்டுள்ளேன். அவர்கள் ஒரு சாரம் அல்லது ஒரு துணி அணிந்து அல்லது ஒரு போர்வையை கழுத்தில் மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்ணுற் றுள்ளேன். சிலர் முழங்காலுக்கு சற்று இறக்க மாவும், வேறும் சிலர் கரண்டை கால் அளவும் நிலையில் தமது மறை விடங்களை வெளிப்படா வண்ணம் தம் ஆடையை கையால் சேர்த்துப் பிடித்தவர்களாகக் காணப் பட்டனர்." அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரிலி) ஆதாரம் புஹாரி.

அவர்களில் பிரபல்யமானவர்கள் சிலர் பின் வருமாறு

- அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
- அபு தர் அல் கிப்பாரி ரழியல்லாஹு அன்ஹு
- கஃப் இப்னு மாலிக் ரழாயல்லாஹு அன்ஹு
- ஸல்மான் அல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு
- ஹன்ழலா ரழியல்லாஹு அன்ஹு
- ஹாரிஸா பின் அல் நுஃமான் ரழியல்லாஹு அன்ஹு
- ஹுதைபா ரழியல்லாஹு அன்ஹு
- அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு
- ஸுஹைப் அல் ரூமி ரழியல்லாஹு அன்ஹு
- ஸலீம் மவ்லா அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
- கிலால் இப்னு ரபாஹ் ரழியல்லாஹு அன்ஹு
- அபு ஸஈத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு

## பள்ளி வாசல் பரிபாலகர்கள்

பள்ளிவாசல் என்பது ஒரு புனித தலமாகும். அதன் பொறுப்புக்கு புண்ணியவான்களே ஏற்ற வர்களாவர். சன்மார்க்க விதி முறைகளைப் பேணுவதே ஒருவனைப் புனிதனாக்குகின்றது என்பதை நாம் அறியவேண்டும். அல்லாஹ்வைப் பற்றிய சம்பூர்ண அச்சமும் தியாக மனமும் கொண்டவர்களே இறை அருள் பெற்றவர்கள், நேர் வழி கண்டவர்கள்.

அதனால் தான் அல் குர்ஆனின் கூவது அத்தியாயம் 18 வது வசனம் பின் வருமாறு கூறுகின்றது.

إِنَّمَا يَعْمُرُ مَسَاجِدَ اللَّهِ مَنْ آمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَلَمْ يَخْشَ إِلَّا اللّٰهَ فَعَسَى أُولَئِكَ أَنْ يَكُونُوا مِنَ الْمُهْتَدِينَ (9:18)

*"எவர்கள் அல்லாஹ்வையிம் இறுதி நாளையும் விசுவாசித்து, தொழுகையையும் கடைபிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருவது டன், அல்லாஹ்வை யன்றி மற்றெவருக்கும் பயப் படாமலும் இருக்கின்றனர்களோ, அவர்கள் தாம் அல்லாஹ் வுடைய பள்ளிகளை பரிபாலனம் செய்யும் தகுதி யுடையவர்கள். (முஃமினான) இத்தகையவர்ளே நேரான வழியியிலிருப்பவர்கள்."* (குர்ஆன் கூ;கஅ)

இவ்வசனத்தின் பிரகாரம் மேற்கண்டோரா லேயே ஒரு பள்ளி நிர்வாகம் சீராக நடைபெற முடி கின்றது. அல்லாஹ்வின் வீட்டுக்கு பொறுப்பாக, பரிபாலகராக வருபவர் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாக நடக்கவும், ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைக்கு முரணாக செயல் படவும் முடியாது. எனவே பரிபாலன வேலைக்கு தெரிவாகின்றவர் சன்மார்க்க அடிப் படைகளான குர்ஆன், ஹதீஸுக் கு மதிப்பளித்து, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பண்பாளராகத் திகழ வேண்டும்.

அல்லாஹ்வை அஞ்சியோரது அழகிய இலட்சணம் தொழுகையை நிலை நாட்டுவதும், சகாத் கொடுத்து வருவதும், உடலாலும் பொருளாலும் தியாகம் புரிவதுமாகும். அத்தகை யோரே பள்ளி நலனைக் கருத்திற் கொண்டு சகல தியாகங்களுக்கும் தம்மை அர்ப்பணிப்பவராக இருக்க முடியும். அல்லாஹ்வின் ஹக்கைப் பேணி நடப்போரே பொதுச்சொத்தில் மிகவும் பொறுப் போடு நடந்து கொள்வர். அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டிய ஹக்கான தொழுகை, ஸக்காத் என்பவற்றில் குறைவும், களவும் செய்பவன் பொதுச் சொத்தான பள்ளிச் சொத்தில் கையாடல் செய்வதில் சிறிதும் பயப்பட மாட்டான்.

கைபர் யுத்தத்திலிருந்து திரும்பிய உத்தம ஸஹாபாக்களில் சிலர் ஒரு மனிதனை குறித்து, அவர் ஷஹீதாகி விட்டார், புனிதப் பதவியை அடைந்து விட்டார் எனறு போற்றி பேசிக் கொண்டி ருந்தனர். இது கேட்ட நபி ஸல்லல்லா ஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள், "நீங்கள் அவ்வாறு கூறாதீர்கள். குறிப்பிட்ட நபர் யுத்தத்தில் கிடைத்த ஒரு போர்வையை கையாடல் செய்ததால் நரகத்துக் குரியவராகி விட்டார்." என்று கூறினார்கள். (தப்ஸீர் இப்ன் கஸீர் க -சஉ௫)

பொதுச் சொத்துக்களில் சம்பந்தப் படுவோர் கொஞ்ச மேனும் சநதேகத்துக்கிடமாக அமையாது தன்னைப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு சமயம் ரஸூலுல்லாஹி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மனிதரைப் ஸதகா திரட்டி வர நியமித்தார்கள். ஸதகாவை சேர்த்து வந்த அந்தத் தோழர், தான் சேர்த்து வந்ததை நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களிடம் ஒப்படைக்கும் போது, 'இது ஸதகாவாகத் தரப் பட்டது. இது எனக்கு கிடைத்தது' என்று கூறிய மாத்திரத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கோபப்பட்டார்கள். "சில மனிதருக்கு என்ன ஏற்பட்டுள்ளதோ தெரியாது. நாம் அவர்களை ஒரு வேலைக்கு அனுப்ப, அவர்கள் போய் வந்து, இது உங்களுக்கு, இது

எனக்கு என்கிறார்களே, அப்படியானவர்கள், அவர்களது பெற்றோர் வீட்டில் இருந்து விடலாமே. அவர்களுக் குரியது கொடுக்கப்படுமா என்று பார்க்கலாம்." எனக் கூறினார்கள். (ஆதாரம் ஸுன்னுத் தாரமீ)

எனவே பள்ளிவாசல்  போன்ற பொது நிறுவனங்களில் நிர்வாகிகளாகப் பங்கு கொள்வோர் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம்.

தொழுகையின் பர்ழு, ஷர்த்து போன்ற வற்றைப் பேணி உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுபவனே பள்ளிப் பொறுப்பை சரிவர நிறைவேற்றுவான். கொடுக்க வேண்டிய ஸக்காத் தை உரிய பொருட்களிலிருந்து முறையோடு கொடுத்து வருபவனே அல்லாஹ்வை அஞ்சி நடப்பவனு மனாவான். வக்புகளை பாதுகாப்பான்.

எனவே தான் பள்ளிக்குரிய அசையும், அசையாத சொத்துக்களைப் பேணிபாதுகாத்து ஸக்காத்தை முறையோடு கொடுத்து வருபவனே பள்ளி வாசல் நிர்வாகத்துக்கு தகுதியுடையோன் என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

மேற் குறிப்பிட்ட ஒருவன் தன் கடமைகளில் இஹ்லாஸ் எனும் மனத் தூய்மை உடையவனாக இருந்து வருவான்.  எச்செயலுக்கும் மற்றவரது பாராட்டை எதிர் பாராது இருப்பது போலவே

எந்தவொரு கருமத்திலும் அல்லாஹ்வையன்றி வேறு எவரையும் அஞ்ச மாட்டான். நிர்வாகத்துக்கு வருபவன் ஊர் விஷயங்களிலும் தலையுட வேண்டி வரும். அச்சமயங்களில் எவரது ஏச்சும், பேச்சும் அவருக்கு தடையாகாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் மீது பரந்த நம்பிக்கை கொண்டு தொழுகை, ஸகாத் போன்ற கடமையளை பேணி நடந்து வருவோரே நேர் வழியிலிருப்போர். எனவே நேர் வழியில் இருக்கும் அவர்கள் எவரது ஏச்சுக்கும், பேச்சுக்கும் பயப்பட மாட்டார்கள். அத்தகைய மக்களே அல்லாஹ்வின் வீடுகளுக்குரிய பரிபாலன வேலைக்கு தகுதியுடையோர்களாவர்.

## பள்ளவாசலும் இஸ்லாமிய இயக்கங்களும்

எமது நாட்டில் சுமார் உ,000 திற்கும் மேற்பட்ட சிறிய, பெரிய  பள்ளி வாசல்கள் உள்ளன. அவை தனிப்பட்டோராலும், வெளி உதவிகளாலும் கட்டப்பட்டவையாகும். அதே நேரம் தக்கியாக்கள். ஸாவியாக்கள், மர்கஸ்கள் என்பவையும்  உள்ளன. இவை ஒவ்வான்றும் தனக்கென்று அமைத்துக் கொண்ட, வகுத்துக்

கொண்ட முறையில் பரிபாலனம் செய்யப் படு கின்றன. இவைகளில் பிரச்சினை தோன்றும் போது வக்பு செய்தவரின் நோக்கப்  படியே கருமமாற்றப் பட வேண்டும் எனவும் பேசப்படுகிறது. வக்பு சட்டமும் இதனையே வலியுறுத்துகிறது.

அதன் பொருள், குறிப்பிட்ட ஒரு முறையில் தான் வக்பு சொத்தை பயன் படுத்த வேண்டும் என்று  சொல்லப்பட்டிருந் தாலும் அக் காரியம் பாவமானதாக இருந்தால், இந்த சந்தர்ப் பத்தில் வக்பு செய்தவரின்  எண்ணப்படி நடக்கட்டும் என்று வாழாவிருக்கலாகாது. அதனால் தான் மஸ்ஜித் என்று குறிப்பிடும் போது, மஸ்ஜித் தவிர்ந்த  மற்ற அனைத்தும் அந்த மஸ்ஜிதின் சட்டங்களிலிருந்து நீங்கி விடுகின்றன.

ஆனால் மஸ்ஜித் என்று வக்பு செய்யப் பட்டவை சகல முஸ்லிம்களுக்கும் உரித்தான இடமாகும். வக்பு செய்தவர் அல்லது  கட்டியவர் உயிரோடு இருந்தாலும், இல்லாவிடினும், அல்லாஹ்வுக்கென்று வக்பு செய்யப்பட்டதும் அது பொதுச் சொத்தாகி விடுகிறது. அதில் உரிமை கொண்டாடவோ, அதிகாரம் செலுத்தவோ எவருக்கும் முடியாது என்பது ஷரீஆ விதியாகும்.

இயக்க ரீதியாக, ஜமாத் ரீதியாக மார்க்கத் துக்கு முறனில்லா மல் செய்யப்படும் சகல விஷயங்

களுக்கும் பள்ளி வாசல்கள் பயன் படுத்தப் படலாம். அப்படியல்லாது குறிப்பிட்ட இயக்கம் அல்லது ஜமாஅத் மாத்திரம் ஏகபோக உரிமை யோடு செயற்படுவது சமூகத்தின் அமைதியை குழைத்து விடுகிறது.

தப்லீக் ஜமாஅத்தார் தஃலீம் வாசிப்பர், தவ்ஹீத் ஜமாஅத்தார் சன்மார்க்கப் வகுப்புக்கள் நடத்துவர். ஜமாஅத் இஸ்லாமியைச் சேர்ந்தோர் குர்ஆன விளக்க வகிப்புக்கள் நடத்துவர். இவை எல்லாம் தஃவா என்பதையும், பள்ளி வாசலில் நடைபெற வேண்டிய நல்ல காரியங்களாகும் என்பதையும் விளங்கி, அனைவரும்செயற் படவேண்டும். ஒன்றயொன்று எதிர்த்தும், பகைத்தும் தீன் பணி ஆற்ற முடியாது.

அத்தகைய துரதிர்ஷ்ட நிலைமைகள் கடந்த காலத்தில் காணப் பட்டன. காவல்துரை வரை சென்று, பின் வக்பு சபை வரை சென்றது. எந்த ஒரு பயனும் கிடைக்க வில்லை. மாறாக, இவ்விடங்க ளுக்கு சமூகமளித்த வழக்கறிஞர்களே நிறைய பயன் பெற்றனர். அவர்களுக்கு பள்ளியின் பணத்திலிருந்தே செலவிடப்பட்டது.

இதனை கவணத்திற் கொண்டே அகில இலங்கை இலங்கை ஜமியத்துல் உலமாவின் மத்திய சபை உஎ/க0/கககூக ல் கொழும்பு

கோட்டை ஜும்ஆப் பள்ளி வாசலில் கூடிய போது பின் வருமாறு முடிவு செய்து அறிக்கை வெளியிட்டது.

இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபட்டு வரும் தப்லீக் ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாமி, தவ்ஹீத் ஜமாஅத் ஆகிய மூன்று இயக்கங்களின் இறுதி இலட்சியம் ஒன்றாக இருப்பினும், இந்த இலட்சியத்தை அடைவதற்கு அவை கையாளும் பிரசார முறைகளைப் பொருத்தே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை கொண்ட அக்கீதாவை பொறுத்த வரையில் இம்மூன்று இயக்கங்களும் முரண்பாடான கருத்துக்களை கொண்டவைகளல்ல. இந்த ஜமாஅத்துகளில் எதுவும் வழி கெட்டது என்றோ, சுன்னத் வல் ஜமாஅத் அகீதாக்களுக்கு மாற்றமானவை என்றோ கூற முடியாது. மூன்று ஜமாஅத்துகளும் நேர்வழியில் உள்ளவை தான் என்பது ஜம்இய்யாவின் நிலைபாடாகும்.

தஃவா பணியில் பல ஜமாஅத்களும் இயக்கங்களும், தனிப்பட்டவர்களும் ஈடுபடுவதை ஜம்இய்யத்துல் உலமா ஆதரிக்கும் அதே வேளை, வேறுபட்ட சிறு கருத்து வேறுபாடு களுக்கு மத்தியிலும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை

கள் செயல் பாடுகள் என்பவற்றைப் பிரசாரம் செய்யும்  போது, தஃவா பணியில் ஈடுபடுபவர் களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பும், ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப் பான் மையும் இருக்க வேண்டும். கருத்து வேறுபாடுகளை பெரிது படுத்தி சமுதாயத்தில் பிளவுகளையும் பிரச்சினை களையும் ஏற்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறது.

மார்க்க சம்பந்தமான விடயங்களில் தர்பியா எனும் பயிற்சி நெறியில் சிலரும், அரசியல், சமூகப் பணிகளில் சிலரும், சமூக சீர்திருத்தப் பணியில் வேறும் சிலரும், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் போன்ற துறைகளில் இன்னும் சிலரும் தனிப்பட்ட முறையிலோ இயக்க ரீதியாகவோ மற்றவர்களை விட கூடுதலாக ஈடுபடுவதில் எவ்விதத் தவறும் இல்லை.

எனினும் நடைமுறை பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்குப் போதித்தபடி சகலரும் உறுதியான ஒரே கட்டடம் போன்று ஐக்கியமாக செயற் படுவது தனிப்பட்ட முஸ்லிங்களினதும், பொது இயக்கங்களினதும் கடமையாகும்.
(தினகரன் உஉ/கக/ககூகக)

காலத்தின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு உலமாக்களால் எடுக்கப்பட்ட இந்த நல்ல முடிவு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த முடிவை உணர்ந்து செயற் படாத வரை சமூகத்தில் உள்ள பிளவும், பிரிவும் வளர்ந்து கொண்டே போகும். அந்த துரதிஷ்ட நிலையில் இருந்து அல்லாஹ் எம்மைக் காத்தருள்வானாக.

# இஃதிகாப்

ஒரு முஸ்லிம் மன நிம்மதி பெறும் இடமாக பள்ளி வாசல்கள் அமைந்துள்ளன. வணக்கங்களை நிறைவேற்றும் இடமாக இங்கு அல்லாஹ்வுக்காக தரித்திருப்பதையே இஃதிகாப் எனப் படுகின் றது. ஐம் புலன்களையும் அடக்கி இறை சிந்தனையைப் பெற்று பாவங்களுக்காக இறைஞ்சிக் கேட்க மிகவும் பொருத்தமான சந்தர்ப்பம் இஃதிகாபாகும்.

“வருடம் தோரும் ரமழான் இருபதுக்குப் பிந்திய நாட்களில் இஃதிகாப் இருக்கும் வழக்கம் ரஸூலு ல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காணப்பட்டது. அன்னார் வபாத்தான வருடம் ரமழானில் இருபது தினங்கள் இஃதிகாப் இருந்தனர்.” ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி.

இஃதிகாபுக்கு சிறப்பான காலம் ரமழான் மாதமாகும். முஸ்லிமான பருவமடைந்த பெருந் தொடக்குகளை விட்டும் சுத்தமான ஒருவர், "அல்லாஹ்வுக்காக" என்ற நிய்யத்தோடு இதனை நிறைவேற்றலாம். மாத விடாய் உள்ள பெண், புத்தி பேதலித்தவர், சிறுவர், காபிர் ஆகியோர் மூலம் இது நிறைவேறாது.

இஃதிகாப் இருக்குமொருவர் ஐவேளை நடாத்தப் படும் இடமான, ஜமஅத் நடைபெறும் இடமாகவுள்ள எந்தப் பள்ளி வாசலிலும் இஃதிகாப் இருக்கலாம். எனவே தக்கியா, ஸாவியா, மர்கஸ் என்பன இஃதிபுக்குறிய இடமல்ல என்பதை நாம் விளங்கிக் கெள்ள வேண்டும். அதாவது பள்ளி வாசலுக்காக வஃப் செய்யப் பட்ட இடமே இஃதிகாபுக்குரிய இடமாகும். தொடர்ந்து தரித்து இருப்பதற்கும், ஜும்ஆ போன்றவைகளை முன்னிட்டு வெளியே செல்லாமல் இருப்பதற்கும் ஜும்ஆ நடைபெறும் பள்ளிகளில் இஃதிகாப் இருப்பதே மிகவும் பொருத்தமாகும்.

இஃதிகாப் இருக்குமொருவர் தொழுகை களை நிறை வேற்றும் அதே வேளை ஸுன்னத் தான தொழுகைகளை தொழுதல், குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் முதலிய வற்றில் ஈடுபடல், நபி (ஸல்) மீது ஸலவாத்துச் சொல்லுதல்

என்பனவற்றில் ஈடுபடுவது மிகவும் சிறப்பாகும். இஃதிகாப் இருப்பவர் பேசலாகாது என்று எண்ணி வாய் மூடியிருப்பது பிழையாகும். இஃதிகாப் இருப்பவர் பிறரோடு கதைத்தல், முடி சீவுதல், நகம் வெட்டுதல், குளித்து மணம் பூசுதல், மலசலகூடத் தேவைக்காக வெளியே செல்லுதல், தொழுகை, குத்பா என்பன நடாத்துதல் எனும் இவை யாவும் அனுமதிக்கப்பட்டவையாகும்.

அத்தியாவசிமான தேவையின்றி வெளியே செல்வதாலும், மத மாற்றம் நிகழ்வதாலும், உடலுறவு கொள்வதாலும் இஃதிகாப் முறிந்து விடும்.

**وَلَا تُبَاشِرُوهُنَّ وَأَنْتُمْ عَاكِفُونَ فِي الْمَسَاجِدِ (2:187)**

*“பள்ளி வாசல்களில் நீங்கள் இஃதிகாப் இருக்கும் நிலையில் (உங்கள் மனைவியர்களான) அவர்களோடு உடலுறவில் ஈடுபட வேண்டாம்.”* 2;287 என்ற அல் குர்ஆன் வசனம் இதனை தெளிவு படுத்துகிறது.

ஒருவர் தன் நாட்டங்கள் நிறைவேற, ஷரீஅத் அனுமதித்த படி நேர்ச்சைகள் செய்யலாம்.

அவ்வாறே இஃதிகாப் இருக்க நேர்ச்சை செய்வதை யும் ஷரீஅ அனுமதித்துள்ளது. பள்ளி வாசல் களில் சிறந்த மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகியவற்றுள் நிறைவேற்ற நேர்ச்சை செய்வோர் அவ்விடங்களிலே இஃதி காபை நிறை வேற்ற வேண்டும்.

உதாரணமாக எனது பிரச்சினை நீங்கி விட்டால் அல் மஸ்ஜிதுல் ஹராமில் ஒரு வாரம் இஃதிகாப் இருப்பேன் என்று எவரும் நேர்ச்சை செய்தால் பிரச்சினை தீர்ந்ததும் நேர்ச்சையை குறித்த இடத்தில் நிறைவேற்ற வேண்டும். அப்படியல்லாது பொதுவாக “பள்ளியில் இஃதிகாப் இருப்பேன்” என்று நேர்ச்சை செய்தவர் தனது இஃதிகாபை தனக்கு வசதியும், விருப்பமு மான ஓர் மஸ்ஜிதில் நிறைவேற்ற அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

ரமழானில் இஃதிகாப் இருக்க நாடுபவர் இருபத்தொராம் நாள் இரவு முதல் ஷவ்வால் பிறை தென்படும் வரை இருக்க வேண்டும். இஃதிகாப் இருப்பவன் வீண்பேச்சுக்களை அடக்கப் பழகுகி றான். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் வழிகளில் முயற்சிக்கின்றான். குறிப்பிட்ட சில நேரம் இறை தியானத்திற்காக மனம் வழிப்படும் சிறந்த பண்பாட்டை பெறுகின்றான்.

## பாங்கும் அதன் சட்டங்களும்

தொழுகைக்காக அழைக்கப் படுவதை அல் அதான் என்று கூறப்படுகிறது. உலகத்தில் உள்ள எல்லாவித அழைப்புகளிலும் மிகச் சிறந்த ஒன்றாக அதான் இருக்கின்றது. பகிரங்கமாக, ஊரறிய, உலகறிய எடுத்துச் சொல்ல இந்த அதானை அல்லாஹ் எமக்கு அமைத்துத் தந்துள்ளான்.

அதான் என்பது எவரேனும் ஒருவரது சொந்த கண்டு பிடிப்பல்ல. வஹி மூலம் உறுதி செய்யப்பட்ட ஒன்றாகும். எனவே அதிலே எந்த ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ எவருக்கும் உரிமையில்லை. அதனால் தான் ஷாபிஈ மத்ஹபின் பிரபல்ய மிக்க இமாம்களில் ஒருவரான இப்னு ஹஜர் அல் ஹைதமி இகாமத்துக்கு முன்னால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்லவது பற்றி கேட்கப் பட்டபோது "அவ்வாறு ஸலவாத்துச் சொல்வது சுன்னத் என்று எவருமே சொல்ல நான் கேட்கவில்லை. பாங்கை கேட்டவர் அது போன்று கூறி இறுதியில் ஸலவாத்துக் கூறி துஆ ஓதுவதையே எங்கள் இமாம்கள் கூறியுள்ளனர்," என்று குறிப்பிடு கின்றார்கள்.

அப்துல்லாஹ் இப்னு ஸைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

“ஒரு சமயம் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உத்தமத் தோழர்களோடு தொழுகைக்கு எவ்வாறு அறிவிப்புச் செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசனை செய்துக் கொண்டிருந்தார்கள். ஊது குழலொன்றின் மூலம் அழைப்பு விடுக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்ட போது (அது கிறிஸ்தவ முறையென்பதால் வெறுப்புணர்வோடு) எந்த முடிவுக்கும் வரவில்லை. அன்றிரவு கனவிலே ஒரு மனிதர் என்னை சுற்றி வரக் கண்டேன். அம் மனிதர் பச்சை நிற இரண்டு ஆடை களை அணிந்தவராக அவரது கையில் ஊதுகுழல் ஒன்றையும் வைத்திருந்தார். கனவிலே கண்ட அம்மனிதனிடம் உம்முடமுள்ள அந்த குழலை எனக்கு விற்பீரா என்று கேட்டேன். அம்மனிதன், அதனை எடுத்து என்ன செய்யப் போகிறாய்? எனக் கேட்டார். அதற்கு நான் அதனை வைத்து தொழுகைக்கு அழைப்பு விடப் போகிறேன் என்று பதில் கூறினேன். அதற்கு அம்மனிதன் (நீர் விரும்பும்) அதை விட நல்லதொன்றை உமக்கு சொல்லித் தரட்டுமா? என்று கேட்டார். ஆம் என்று நான் கூறியதும், அவர் பின் வருமாறு கூறினார்.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ.

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ

أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ، أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ.

حَيَّ عَلَى الصَّلاَةِ، حَيَّ عَلَى الصَّلاَةِ.

حَيَّ عَلَى الْفَلاَحِ، حَيَّ عَلَى الْفَلاَحِ.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ.

لاَ إِلَهَ إِلاَّ اللهُ.

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்,
அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லா\ஹ்,
அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லா\ஹ்,
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்
ஹையாலஸ் ஸலாஹ், ஹையாலஸ் ஸலாஹ்,
ஹையால்ல் பலாஹ், ஹையாலல் பலாஹ்,
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்,
லா இலாஹ இல்லல்லாஹ்

தொழுக்காக இகாமத் கூறும்போது பின் வருமாரு கூறுவீராக என்று சொன்னார்.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ.

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ.
أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ.
حَيَّ عَلَى الصَّلَاةِ، حَيَّ عَلَى الْفَلَاحِ.
قَدْ قَامَتِ الصَّلاَةُ، قَدْ قَامَتِ الصَّلاَةُ.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ.
لاَ إِلَهَ إِلاَّ اللهُ.

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்,
அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்,
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்
ஹையாலஸ் ஸலாஹ், ஹையாலல் பலாஹ்,
கத்காமதிஸ் ஸலாஹ், கத்காமத்திஸ் ஸலாஹ்,
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்,
லா இலாஹ இல்லல்லாஹ்

காலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி லஸல்லம் அவர்களிடம் வந்து, நான் இரவில் கண்ட கனவு பற்றி கூறினேன். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “நிச்சயமாக இது அல்லாஹ் நாடிய கனவாகும். அப்துல்லாஹ்வே! நீர் எழுந்து சென்று கனவில்

கண்டதை பிலாலுக்கு சொல்லி விட்டு, அவ்வாறே அதான் சொல்லுமாறும் கூறும். அவர் உன்னை விட உயர்ந்த சப்தமுடையவர்” என்று கூறினார்கள்.

அப்துல்லாஹு இப்னு ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். “நான் பிலாலோடு எழுந்து நின்று, அவருக்கு சொல்லிக் கொடுத்தேன். அவரும் சொல்லிக் கொண்டிருக்கை யில் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் செவியுற்றார்கள். உடனே அணிந்திருந்த ஆடையை இழுத்துக் கொண்டு ஓடி வந்து, ‘சத்தியத்தோடு உங்களை தூதராக அனுப்பியவன் மீது ஆணையாக, இது போன்ற ஒன்றை நானும் கனவில் கண்டேன்’ எனறு கூறினார்கள். உடனே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அல்லாஹ்வுக்கே எல்லப் புகழும் “பலஹுல் ஹம்து” என்று கூறினார்கள். ஆதாரம் முஸ்னத் அஹ்மத் கங/ஙக, ககூசங0.

எனவே பாங்கு என்பது எவராவது தன்னிச்சை பிரகாரம் ஆரம்பித்த தொன்றல்ல என்பதை நாங்கள் விளங்க வேண்டும். உத்தமத் தோழர் கண்ட கனவை உறுதிப் படுத்தி அங்கீகரித்தவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே. அன்னாரும் தன்னிச்சை பிரகாரம் எதையும் பேச மாட்டார்கள். அவர்கள்

பேசுவதெல்லாம் வஹீ மூலம் அறிவிக்கப் படும் விஷயங்களே.

**وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى، إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَى. (53:3,4)**

*“தனக்கு வஹியாக அறிவிக்கப் பட்டதையன்றி அவர் மனோ இச்சையின் படி எதையும் பேச மாட்டார்.”* 53;3, 4.

பாங்கென்பது அதற்குரிய வார்த்தைகளை சொல்வதன் மூலமே பாங்காக கருதப்படுகிறது. அந்த வார்த்தைகளுக்கு முன்னாலோ, பின்னாலோ ஏதேனும் சேர்த்து ஓதுவது தடுக்கப் பட்டதாக்கும்.

ஷாபிஈ மதஹபின் மிகப் பிரபல்யமான இமாம் இப்னு ஹஜர் அல் ஹைதமி தம்முடைய பதாவா முதலாம் பாகம் கருகம் பக்கம் பாங்கின் ஒழுங்கு முறைகளில் பாங்குக்கு பதிலும் கூறி ஸலவாத்துடன் பாங்கு துஆவையும் ஓத வேண்டம் என்ற விசயத்தை விளக்கும் போது பின்வருமாறு கூறுனார்கள்.

... وورد أحاديث آخر بنحو تلك الأحاديث السابق ولم نر في شيئ منها التعرض للصلاة عليه صلى الله عليه وسلم قبل الأذان ولا إلى محمد رسول الله بعده ولم نر أيضا في كلام أئمتنا تعرضا لذلك أيضا فحينئذ كل واحد من

هذين ليس بسنة في محله المذكور فيه فمن أتى بواحد منهما في ذلك معتقدا سنيته في ذلك نهى عنه ومنع منه لأنه تشريع بغير دليل ومن شرع بلا دليل يزجر عن ذلك وينهى عنه

“.... ஸலவாத்துச் சொல்லி துஆ ஓதுவது பற்றிய வேறும் ஹதீஸ் கள் வந்துள்ளன. அதில் எந்த ஒன்றிலும் கூட பாங்குக்கு முன்னால் ஸலவாத் சொல்லுவதையோ, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதை பாங்கின் இறுதியில் சேர்த்து சொல்வதையோ குறிப்பிடப் படவில்லை. எமது இமாம்கள் எவரும் இது பற்றிக் கூறியதாகவும் இல்லை. மேலே குறிப்பிட்ட இரண்டு இடங்களிலும் (பாங்குக்கு முன் ஸலவாத்தும் இறுதியில் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்றுசேர்ப்பதும்) ஸூன்னத்தல்ல. இவ்வாறு சொல்வது சுன்னத்தென்று எண்ணத்தில் எவரும் நடந்துக் கொண்டால் தடுக்கப் பட வேண்டும். ஏனெனில் அவ்வாறு சொல்வது ஆதாரமின்றி மார்க்கத்தை உண்டு பண்ணியதாகக் கருதப் படும்.

عَنْ عَائِشَةَ رضي الله عَنْها قَالَتْ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ "مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ مِنْهُ فَهُوَ رَدٌّ" (رواه مسلم)

“யார் (ஆதாரமின்றி) மார்க்கத்தில் இல்லாத ஒரு விடயத்தைச் செய்தால் அது தடுக்கப் பட வேண்டும்.” (அறிவிப்பவர் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். ஆதாரம் முஸ்லிம்.

இதே பத்வாவின் தொடரில் பாங்கு முடிந்த பின் உரத்த குரலில் சொல்லப்படும் ஸலவாத்தும் நிறுத்தப் பட வேண்டும் என்று இமாம் அவர்கள் தீர்ப்புக் கூறியுள்ளார்கள்.

இது ஒரு மார்க்கத் தீர்ப்பாகும். நம் நாட்டில் அனேகமான இடங்களுக்குப் பொறுத்தமான முறையில் ஷாபிஈ மத்ஹபின் தீர்ப்பு உள்ளது. எனவே முஅத்தினாக பணி புரிவோர் தமது பணியோடு சம்பந்தமான இவ் விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும். பாங்கை உரிய முறையில் சொல்வதற்கு நிர்வாகிகளும் இடமளிக்க வேண்டும்.

முஅத்தின் பள்ளி வாசல் கூட்டவும், மலசல கூடம் துப்பறவு செய்யவும் உள்ள வேலைக்காரர் அல்ல. பிலால் இப்னு ரபாஹ், அப்துல்லாஹ்

இப்னு உம்மி மக்தூம் ரழியல்லாஹு அன்ஹுமா போன்றோர் செய்த பணியைச் செய்யும் இவர்கள் மரியாதை செய்யப்பட வேண்டியவர்கள். அவர்கள் மறுமையில் பெறப் போகும் கூலி மகத்தானது.

عَنْ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما قال: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ "مَنْ أَذَّنَ سَبْعَ سِنِينَ مُحْتَسِبًا كُتِبَتْ لَهُ بَرَاءَةٌ مِنْ النَّارِ" (رواه الترمذي)

'அல்லாஹ்வின் கூலியை எதிர் பார்த்து ஏழு வருடங்கள் பாங்கு சொல்லுபவருக்கு, நரக விடுதலைக்கான பட்டோலையொன்று எழுதப் படும்' என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் திர்மிதி.)

அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்ப்பவர் நேரமறிந்து, முறை அறிந்து பாங்கை சொல்லுவார். அதனால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ "الْإِمَامُ ضَامِنٌ وَالْمُؤَذِّنُ مُؤْتَمَنٌ اللَّهُمَّ أَرْشِدْ الْأَئِمَّةَ وَاغْفِرْ لِلْمُؤَذِّنِينَ" (رواه أحمد)

"இமாம் பொறுப்பாளி (ஆவார்), முஅத்தின் நம்பப் படுபவர் (ஆவார்). அல்லாஹ்வே! இமாம்களை சீராக வழி நடாத்துவாயாக. முஅத்தின்களை மன்னித்தருள்வாயாக." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்; அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு) ஆதாரம் அஹ்மத்.

தொழுகையை நடாத்தும் இமாம் பெரிய தொரு சுமையை சுமந்தவர் ஆகிறார். தொழுகை சரியாக நிறைவேற்றப்பட அவரே பொறுப்பாளர். பாங்கு சொல்பவரது பாங்கை வைத்தே தொழுப வர்கள் தொழுகை நேரம் பற்றித் தெரிந்துக் கொள்கின்றனர். நேரம் அறிந்தே பாங்கு சொல்லப் பட்டுள்ளது என்று நம்புகின்றனர். எனவே தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற் கண்ட துஆவையும் கேட்டார்கள்.

இப்புனிதமான பணிக்காக அழகிய குரல் வளம் கொண்ட, திடகாத்திரமான, பேணுதலுல்ல வர்களே தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். பீடி,

சிகரட் முதலிய கெட்ட பழக்கங்கள் அற்றவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். கால நிலைமை களை கருத்திற் கொண்டு அவர்கள் கண்ணியமாக வாழ சம்பளம் வழங்கப்பட வேண்டும். அழகிய தோற்றத்தில் கம்பீரமாக நின்று, பார்ப்போரை கவரவும், கேட்போரை வசீகரக்கவும்செய்யும் பாங்கை மொழிவோரே ஹஸரத் பிலால் ரழியல்லாஹுு அவர்களின் வாரிசுகளான முஅத்தின்கள். அத்தகையவர்களை பள்ளியில் நியமிப்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

## தொழும் ஒழுங்குகள்

பள்ளிவாசலில் ஜமாஅத்தாகவும் தனித்தும் தொழுகைகள் நிறைவேற்றப் படுகின்னறன. தொழுபவர் தனக்கு முன்னால் ஏதேனும் ஒன்றை ஸுுத்ரா (மறைப்பாக) வைத்து தொழவேண்டும். இமாமத் செய்பவர் மிஹ்ராபை விட்டும் பின்னாகித் தொழுவதாக இருந்தால் ஏதேனும் ஒன்றை ஸுுத்ராவாக வைத்துத் தொழுவது ஸுுன்னத் தாகும். பழைய பள்ளிகளில் தூண்கள் காணப்பட்டன. அதனால் அவற்றை ஸுுத்ராவாக வைத்துத் தொழும் வாய்ப்பு இருந்தது. தற்போது அனேகமான பள்ளிகளில் தூண்கள் காணப் படுவதில்லை. இந் நிலையில் தொழுகைக்கு

நிற்பவர் ஏதேனும் ஒரு பொருளை ஸுத்ராவாக வைத்துத் தொழக் கடமைப் படுகின் றார். ஸுத்ரா வைத்துத் தொழுவதனால் எதேனும் தேவைக்காக அவரைத் தாண்டிச் செல்பவருக்கு சிரமம் இருக்காது.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رضِي اللهُ عَنْهُ قَالَ : قاَل النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: "إِذَا صَلَّى أَحَدُكُمْ فَلْيُصَلِّ إِلَى سُتْرَةٍ ولْيَدْنُ مِنْهَا ولاَ يَدَعْ أَحَدًا يَمُرُّ بَيْنَ يَدَيْهِ فإِنْ جَاءَ أَحَدٌ يَمُرُّ فَلْيُقَاتِلْ فَإِنَّهُ شَيْطَانٌ" (رواه أبوا داود والنسائي)

"உங்களில் எவரும் தொழுகைக்காக நின்றால் ஒரு மறைப்பை நோக்கித் தொழுங்கள். மேலும் அதனை நெருங்கி நில்லுங்கள். தொழும்போது எவரையும் முன்னால் செல்ல விட வேண்டாம். எவரேனும் அவ்வாறு நடந்து சென்றால் அவரைத் தடுங்கள். அடியுங்கள். அவர் ஷைத்தான்." (அறிவிப்பவர் அபூ ஸயீத் குத்ரி ஆதாரம் அபூ தாவூத், அந் நஸாஈ.

ஸுத்ராவின் விஷயத்தில் அதிகம் பேர் கவனயீனமாக நடந்துப் கொள்கின்றனர். படித்தோரும், பாமரரும் புரியும் இக்குற்றம் அனைவருக்கும் உணர்த்தப் பட வேண்டும்.

## கதீப்மாரின் சிறப்பான பணி

பள்ளிவாசலின் சிறப்பான பணி கத்தீப்மாரின் செயற் பாட்டிலே தங்கியுள்ளது என்றால் அது பொய்யாகாது. பள்ளி நிர்வாகம் பள்ளியின் மேற் பார்வைக்குப் பொறுப்பாக இருந்து செயற் பட்டாலும், பள்ளிவாசல் மூலம் எதிர்பார்க்கப் படும் சமூக மாற்றம், சன்மார்க்கத் தெளிவு என்பன கத்தீப் மூலமேயன்றி வேறு எந்த வழியினாலுமல்ல என்பதே உண்மை.

கத்தீபாக உள்ளவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏறிய இடமான மிம்பரில் ஏறுபவர். அந்த இடத்தின் கண்ணியத் தைப் பேணும் கடமைபாட்டுக்கு உரியவர்.

ஆதலால் அவர் தன்னுடைய பேச்சு, நடத்தை ஏனைய தொடர்புகள் யாவற்றிலும் ஜமாஅத்துக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். உடை, நடை முதலிய சுய தோற்றத்திலும், தான் கதீப் என்பதை மறந்து வாழ முடியாது. மக்கள் அமைதியாக அடக்கமாக ஆடாது, அசையாது வாய்மூடி மௌனமாக நின்று செவி தாழ்த்தும் ஒரு பிரசங்கம் குத்பா மாத்திரமேயாகும். அப்படியான பிரசங்கம் சமூகத்துக்கு மார்க்க விளக்கத்தைக் கொடுக்க்க் கூடியதாக, ஒற்றுமைக்கு வழிகோலக் கூடியதாக அமைய வேண்டும். அப்போதே அவரது பணி சிறப்பாக அமையும்.

உலகில் கதீப்களைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்காத ஒரு மேடையாகவே மிம்பர் அமைந்துள்ளது. அந்த இடத்தில் உண்மை சொல்லப்பட வேண்டும். உண்மை சம்பவங்கள் சொல்லப் பட வேண்டும். ஸஹீஹான (சரியான) ஹதீஸ்கள் மூலம் விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். பிற சமூக உறவுகள், வியாபாரம், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தெளிவோடு சம கால தேவைகளை நிவர்த்திக்கும் பிரசங்கங்கள் நிகழ்த்தப் பட வேண்டும்.

உணர்ச்சிகளை தூண்டி, குழப்பங்களுக்கு வழி காட்டாமல் இருப்பது கதீப் மாரின் பணியாகும். குர்ஆனுக்கு தன்னிச்சைப் பிரகாரம் விளக்கம் கொடுக்லாகாது. ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: "مَنْ قَالَ فِي الْقُرْآنِ بِرَأْيِهِ فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنْ النَّارِ" (رواه الترمذي)

“அல் குர்ஆனுக்கு சுய விளக்கம் அளிப்பவர் நரகில் தன் அமர் விடத்தைத் தேடிக்கொள்ளட்டும்.” அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, ஆதாரம் திர்மிதி.

அதே போன்றுதான் ஹதீஸ் என்ற பெயரில் பொய்களைச் சொல்லும் கதீப்மாரும் எச்சரிக்கை யோடு இருக்க வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

"مَنْ كَذِبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنْ النَّارِ" (رواه البخاري)

“வேண்டுமென்றே எவன் என் மீதுபொய் கூறுகிறானோ, அவன் தனது இருப்பிடத்தை நரகத்தில் எடுத்துக் கொள்ளட்டும்.” ஆதாரம் புஹாரி.

எனவே குத்பா மேடை மிகவும் அவதானத் தோடு பயன் படுத்தப் படவேண்டிய ஒரு இடமாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அடுக்கு மொழிகளோ, கலப்பு மொழிகளோ, நடிப்பு மொழிகளோ, கட்டுக் கதைகளோ, சிரிப்பூட்டும் செய்திகளோ, அழுவது போன்ற பாசாங்கோ குத்பாவின் பயனை கெடுத்து விடலாம்.

தக்வாவை உண்டு பண்ணும் விதத்தில் சரியான வரலாற்றுச் சம்பவங்கள், உத்தம ஸஹாபாக்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங் களை மேற்கோடு காட்டி, சந்தர்ப்பத்திற்கேட்ப, மிகவும் நீளாமலும் பார்த்துக் கொள்ளும் கதீபே தன்

பணியை சீறாக நிறைவேற்ற முடியும். இப்பணி மேலும் சிறக்க, குத்பாவை செவியுறும் மக்கள் விளங்கும் மொழியில் குத்பா ஆற்றும் திறன் வளர்க்கப்பட வேண்டும்.

பன்மொழியில் பாண்டித்தியம் ஒரு கதீபின் தஃவாப் பணிக்கு துணை புரியும் என்றால் மிகை யாகாது. பரந்த வாசிப்பு, அன்றாட நிகழ்வுகள் பற்றிய அவதானம் என்பன கதீபுக்கு அவசியமான ஒன்றாகும். பல தரத்தைச் சேர்ந்தோரும் ஒன்று கூடும் இடத்தை அவதானத்திற் கொண்டே பிரசங் கங்கள் தயாரிக்கப் பட வேண்டும். அப்போதே ஒரு கதீப் தன் பணியில் வெற்றியாளனாகத் திகழ்வார்.

மேற்கூறப்பட்ட யாவற்றோடும் நல்லதோர் ஆடையணிந்து கதீப் பிரசங்கமாற்ற வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெள்ளிக் கிழமைக்கென்றே தனியான ஆடை வைத்திருந்தார்கள். அவ்வாறே விருந்தினரை வரவேற்கவெனவும் பிரிதான ஓர் ஆடை வைத்தி ருந்தார்கள் என்று வரலாறு சான்று பகர்கின்றது.

“ஒரு வெள்ளிக் கிழமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிம்பரிலிருந்து பின் வருமாறு கூறக் கேட்டேன். உங்களில் எவரும் தன்னுடைய தொழிலுக்கென அணியும் இரண்டு ஆடைகள் தவிர வெள்ளிக் கிழமைக்கென்று வேறு

இரண்டு ஆடைகள் வாங்கி வைத்துக் கொள்வது எவர் மீதும் குற்றமில்லை." அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னுஸ் ஸல்லம், ஆதாரம் இப்னு மாஜா.

இந்த ஹதீஸ் மிகவும் தெளிவாகவே வெள்ளிக் கிழமைக் கென்று தனியான ஆடை ஒன்றை வைத்திருப்பதன் அவசியத்தை வலியுறுத் துகிறது. எனவே ஜும்ஆவுக்கு சமூகமளிக்கும் அனைவரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகும். விஷேடமாக, கதீப் தனது ஆடை அலங்காரங்களை ஒரு உயர்ந்த நிலையில் ஏற் படுத்திக் கொள்வது மிகவும் வேண்டற் பாலதாகும்.

## பள்ளிவாசல் பணி சீராக அமைய நாம் என்ன செய்ய வேண்டும்?

- அல் குர்ஆனில் கூறப்பட்டுள்ள பண்புகளுடைய பரிபாலகர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் அரசியல் தலையீட்டுக்கு இடமளிக்கக் கூடாது.

- தெரிவு செய்யப்படும் அவர்கள் பள்ளியில் நடைபெறும் காரியங்களை ஜமாஅத் தொழுகை, பாங்கு முதலியவற்றின் அமைப்பு முறை அடிப்படை அறிவுகளை தெரிந்துக் கொள்ள வேண்டும்.

- பல்வேறு இஸ்லாமிய இயக்கங்கள் உள்ள ஊரில் எல்லோரையும் கலந்த ஒரு நிர்வாகமே அமைய வேண்டும். ஒன்றிலும் சம்பந்தமில்லா நன்னடத்தையும், சன்மார்க் கப்பற்றும் உள்ளவர்களை கொண்ட உயர் ஆலோசணை சபையொன்று அமைக்கப் படவேண்டும்.

- தெரிவின் போது மூப்பு, அறிவு, அனுபவம் என்பவற்றோடு ஏற்கெனவே நிர்வாகம் செய்து குற்றங்களுக்கு ஆளாகாதவர் களையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

- இரண்டு சபைகளிலும் ஊரிலுள்ள தகுதியும், பக்குவமும் உள்ள ஆலிம்கள் இடம் பெற வேண்டும்.

- கத்தீபாக, இமாமாக பணியாற்றுவோரை கட்டுப் படுத்த நிர்வாக சபை ஒரு போதும் எத்தணிக்கக் கூடாது.
- அவர்களை சுயமாக இயங்க விடுவதோடு, தேவையான ஆலோசனைகள் வழங்கலாம்.
- பல இயக்கங்கள் உள்ள ஊர்களில் அகில இலங்கை ஜாமியத்துல் உலமா ககூகூகல் எடுத்த தீர்மானப்படி தப்லீக், தவ்ஹீத், ஜாமஅத்தே இஸ்லாமி முதலிய இயக்கங்களுக்கு, அவர்களது செயற் பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும்.
- ஊர் ஜமாஅத்தார் விபரக் கோவை ஒன்று எப்போதும் இருந்து வரும் அதே நேரம் ஸகாத், ஸதகா சேமிப்புக்கு ஒரு ஒழுங்கு முறையும் ஏற்படுத்தப் பட வேண்டும்.
- பள்ளிவாசலில் இஸ்லாமிய நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்று உருவாக்கப் படவேண்டும்.

- பாடசாலையில் கற்கும் உயர் வகுப்பு மாணாக்கருக்கு தேவையான பாடங்கள் நடாத்த ஒழுங்குகள் பள்ளிக்கு அண்மையில் ஏற்படுத்தப் பட வேண்டும்.

- ஊரில் நிகழும் எந்தப் பிரச்சனைகளையும் பாவமான, குற்றமான காரியங்களையும் நிர்வாகமோ அதற்கு கீழுள்ள கமிட்டியோ கவனித்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

# பயனுள்ள துஆக்கள்

## வுழு செய்யுமுன் ஓதவேண்டிய துஆ.

பிஸ்மில்லாஹ் என அல்லாஹ்வின் பெயர் கொண்டு.... ஆதாரம் அபு தாவூத், இப்னு மாஜா, அஹ்மத்

## வுழு செய்த பின் ஓத வேண்டிய துஆ

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ ورَسُولُهُ اللهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ واجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ، سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ (صحيح مسلم والترمذي والنسائي)

பொருள்; “வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை-துணை யாருமில்லை என்று நான் சாட்சியம் கூறுகிறேன். மேலும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய அடிமையும், தூருமாவார்கள் என்றும் சாட்சியம் கூறுகிறேன். யா அல்லாஹ்! என்னை பாவமீட்சி தேடக் கூடியவர்களுள் ஒருவனாக ஆக்குவாயாக. மேலும் மிகவும் தூய்மை பெற்றவர்களுள் ஒருவனாகவும் ஆக்குவாயாக. யா அல்லாஹ்! உன்னை புகழ்வதோடு நீ தூய்மையானவன் என்று துதிக்கவும் செய்கிறேன். வணக்கத்துக்கு உரியவன் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று நான் சாட்சியம் கூறுகிறேன். உன்னிடமே நான் பாவமன்னிப்பு கோருகிறேன். மேலும் பாவ மீட்சி தேடி

உன்னிடமே மீளுகிறேன்." ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம், திர்மிதி, நஸாஈ.

## மஸ்ஜிதினுள் நுழையும் போது ஓத வேண்டிய துஆ

أَعُوذُ بِاللهِ الْعَظِيمِ وَبِوَجْهِهِ الْكَرِيمِ وَسُلْطَانِهِ الْقَدِيمِ مِنْ الشَّيْطَانِ الرَّجِيمِ، بِسْمِ اللهِ والصَّلاَةُ والسَّلاَمُ عَلَى رَسُوْلِ اللهِ اللهُمَّ افْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ. (رواه مسلم، وأبو داود)

"மகத்ததுவம் கொண்ட அல்லாஹ்வைக் கொண்டும், அவனது திருமுகத்தைக் கொண்டும், அவனது நிலையான மேலாதிக்கத்தைக் கொண்டும் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு தேடுகிறேன். அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு (மஸ்ஜிதுல் நுழைகிறேன்) ஸலவாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் மீது உண்டாவதாக. யா அல்லாஹ்! எனக்காக உனது அருள் வாயில்ளை திறந்து விடுவாயாக. ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம், அபு தாவுத்.

## மஸ்ஜிதில் இருந்து வெளியே வரும் போது ஓத வேண்டிய துஆ

بِسْمِ اللهِ والصَّلاَةُ والسَّلاَمُ عَلَى رَسُوْلِ اللهِ اللهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ اللّهُمَّ أَعْصِمْنِيْ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ (رواه مسلم وأبو داود)

“அல்லாஹ்வின் திருப்பெயரால்! ஸலாத்தும் ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் மீது உண்டாவதாக! யா அல்லாஹ் நான் உனது கிருபையை யாசிக்கிறேன். யா அல்லாஹ் எடுத்தெறியப் பட்ட ஷைத்தானை விட்டு என்னைப பாதுகாப்பாயாக.” ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம், அபூ தாவூத்

## பாங்கு துஆ

பாங்கு சொல்பவருக்கான பதிலில் அவர் சொன்ன வார்த்தைகளை திரும்பச் சொல்ல வேண்டும். ஆனால் ஹய்யாலஸ் ஸலாத் மற்றும் ஹய்யாலல் பலாஹ் எனும் இவ்விரண்டின் பதிலிலும் லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்

لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ என்று சொல்ல வேண்டும்.

பொருள்; நன்மை செய்ய சக்தி பெறுவதும் தீமையை விட்டு விலகுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர வேறில்லை. ( ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

❖ பாங்கு சொல்பவர் அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று மொழிந்ததும், அதற்கு பதிலாக பின் வரும் திக்ரை கூற வேண்டும்.

وَأَنَا أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ ورَسُولُهُ رَضِيْتُ بِاللهِ رَبًّا وَبِمُحَمَّدٍ رَسُوْلاً وَبِالإِسْلاَمِ دِيْنًا.

பொருள்; வணக்கத்திற்குறிய அல்லாஹ்வை தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை துணை இல்லை என்றும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அல்லாஹ்வின் அடியானாகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்றும், அல்லாஹ்வை இரட்சகன் - அதிபதி என்றும், முஹம்மத் நபியை தூதர் என்றும் இஸ்லாத்தை இறை மார்க்கம் என்றும் பொருந்தி கொண்டேன் என்று நான் சாட்சியம் கூறுகிறேன்.

- ❖ பாங்கு சொல்பவருக்கு பதிலளித்த பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் சொல்ல வேண்டும்.
  அறிவிப்பவர்; அப்துல்லாஹ் இப்ன் அம்ரிப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு . ஆதாரம் முஸ்லிம்.

பிறகு இந்த துஆவை ஓதுவது சுன்னத்.

اللهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلاَةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدًا الْوَسِيلَةَ وَالْفَضِيلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ (إِنَّكَ لاَ تُخْلِفُ الْمِيْعَادَ)

யா அல்லாஹ்! இந்த முழுமையான அழைப்பினதும், நிலையான தொழுகையினதும் இரட்சகனே! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பிரத்தியேக நெருக்கத்தையும், சிறப்பையும் வழங்குவாயாக. மேலும் “மக்காமுல் மஹ்மூத்” எனும் புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்பு வாயாக. அவ்வாரேநீ வாக்குறுதி அளித்துள்ளாய். நிச்சயமாக நீ வாக்குறுதி மீறுவில்லை. (ஆதாரம் புஹாரி)

## இஸ்திகாரா (நன்மை தேடி தொழும்) தொழுகையின் துஆ

اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي - أَوْ قَالَ عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ - فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي ثُمَّ بَارِكْ لِي فِيهِ وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ قَالَ فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِي

“யா அல்லாஹ்! நான் உன்னிடம் உனது ஞானத்தைக் கொண்டு (இக்காரியத்தில்) நன்மையை கேட்கின்றேன். மேலும் உனது வல்லமையை கொண்டு (தேவையான) ஆற்றலை கேட்கின்றேன். மேலும் உன்னிடமிருந்து உனது மகத்தான அருளை கேட்கின்றேன். ஏனெனில் நீ வல்லமை பெற்றவன், என்னிடம் எந்த

வல்லமையும் இல்லை. மேலும் நீ நன்கு அறிபவன். நான் எதையும் அறியேன். மேலும் நீ மறைவான வற்றை அறிந்தவன். யா அல்லாஹ்! இக்காரியம் (காரியத்தின் பெயரை குறிப்பிடுக) எனக்கும், எனது தீனுக்கும், எனது வாழ்க்கைக்கும், எனது விவகாரத்தின் முடிவிற்கும் நன்மையானது என நீ அறிந்தால் அதனைச் செய்ய விதித்தருள் வாயாக. மேலும், இதனை எனக்கு இலகுவாக்கித் தருவாயாக. பிறகு இதில் எனக்கு அருள் புரிவாயாக. இந்தக் காரியம் எனக்கும் எனது தீனுக்கும் எனது வாழ்க்கைக்கும் எனது விவகாரத்தின் முடிவுக்கும் தீமையானது என நீ அறிந்தால் இதனை என்னை விட்டும் அகற்றி விடுவாயாக. என்னையும் திருப்பி விடுவாயாக. மேலும் எனக்கு நன்மையை சேர்ப்பாயாக. அது எங்கிருந்தாலும் சரியே. பிறகு அதில் திருப்தி ஏற்படுத்தி தருவாயாக.” (ஆதாரம் புஹாரி)

இவ்வாறு ஒருவன் இறைவனிடத்தில் நன்மை வேண்டிக் கொண்டு இறை விசுவாமுள்ள சகோரனிடம் ஆலோசனையும் பெற்றுக் கொண்டு தனது பணியை முழு உறுதியுடனும் முயற்சியுடனும் செய்யத் தொடங்கினால், அதி தோல்வியுற மாட்டான். (ஆதாரம் புஹாரி)

## வித்ருடைய குனூத்தின் துஆ

اللَّهُمَّ اهْدِنِي فِيمَنْ هَدَيْتَ وَعَافِنِي فِيمَنْ عَافَيْتَ وَتَوَلَّنِي فِيمَنْ تَوَلَّيْتَ وَبَارِكْ لِي فِيمَا أَعْطَيْتَ وَقِنِي شَرَّ مَا قَضَيْتَ إِنَّكَ تَقْضِي وَلَا يُقْضَى عَلَيْكَ وَإِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ وَلَا يَعِزُّ مَنْ عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ (رواه ابن ماجه والترمذي)

பொருள்; யா அல்லாஹ்! நீ யாருக்கு நேர்வழி காட்டினாயோ அவர்களுள் எனக்கும் நேர்வழி காட்டுவாயாக! மேலும் நீ யாருக்கு ஆரோக்கியம் அளித்தாயோ அவர்களுள் எனக்கும் ஆரோக்கியம் அளிப்பாயாக. நீ யாரை பொறுப்பேற்றுக் கொண்டாயோ அவர்களுள் என்னையும் பொறுப் பேற்பாயாக. மேலும் நீ அளித்துள்ளதில் அபிவிருத்தி தருவாயாக. மேலும் நீ அளித்த வற்றில் தீர்ப்பின் தீங்கிலிருந்து என்னை காப்பாற்று வாயாக. ஏனெனில் நீயே தீர்ப்பளிக்கிறாய். உனக்கு மாற்றமாக தீர்ப்பு அளிக்கப் படுவதில்லை. நீ யாருக்கு நேசனாகி விட்டாயோ அவர் ஒரு போதும் இழிவடைவதில்லை. நீ யாரை பகைத்தாயோ அவர் ஒரு போதும் கண்ணியம்

பெறுவதில்லை. எங்கள் இரட்சகனே! நீ மேலோங்கிய உயர்வுடையனாகி விட்டாய். (ஆதாரம் அபூ தாவூத், திர்மிதி)

## வித்ர் தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டியது

سُبْحَانَ الْمَلِكِ الْقُدُّوْسِ (رَبَّ المَلاَئِكَةِ وَالرُّوْحِ)

பொருள்; தூய்மையான, புனிதமான அரசனாகிய அல்லாஹ்வை துதிக்கிறேன். அவன் வானவர்களுடையவும், ரூஹ் எனும் ஜிப்ரீலு டையவும் அதிபதி ஆவான். (ஆதாரம் நஸாஈ)

## மழை வேண்டி ஓதும் துஆ

"اللَّهُمَّ اسْقِنَا غَيْثًا مُغِيثًا مَرِيئًا مَرِيعًا نَافِعًا غَيْرَ ضَارٍّ عَاجِلًا غَيْرَ آجِلٍ. اللَّهُمَّ أَغِثْنَا، اللَّهُمَّ أَغِثْنَا، اللَّهُمَّ أَغِثْنَا. اللَّهُمَّ اسْقِ عِبَادَكَ وَبَهَائِمَكَ وَانْشُرْ رَحْمَتَكَ وَأَحْيِ بَلَدَكَ الْمَيِّتَ (رواه البخاري، وأبو داود)

பொருள்; யா அல்லாஹ்! எங்களுக்கு மழை பொழிந்தருள் வாயாக. உதவிகரமான, மகிழ்ச்சிகரமான, பசுமை ஏற்றபடுத்தக் கூடிய மழையை விரைவான, தாமதமாகாத மழையை

(பொழிந்தருள் வாயாக) யா அல்லாஹ்! மழையை பொழியச் செய்வாயாக. யா அல்லாஹ்! உன் அடியார்களுக்கும் விலங்குகளுக்கும் தண்ணீர் புகட்டுவாயாக. மேலும் உனது அருளை பரப்புவாயாக. (மழை பொழியச் செய்து) இறந்து கிடக்கும் இந்த உனது ஊருக்கு உயிர் கொடுப்பாயாக. (ஆதாரம் புஹாரி, அபூ தாவூத்)

**ஷிர்கை – இணை வைப்பதை அஞ்சும்போது ஓதும் துஆ**

اللّهُمَّ إِنِّي أَعُوْذُبِكَ مِنْ أَنْ أُشْرِكَ بِكَ وَأَنَا أَعْلَمُ، وَأَسْتَغْفِرُكَ لِمَا لاَ أَعْلَمُ (مسند أحمد)

பொருள்; யா அல்லாஹ்! நான் அறிந்துக் கொணடே உன்னோடு பிரிதொன்றை இணை யாக்குவதிலிருந்து உன்னிடம் பாடுகாவல் தேடுகிறேன். மேலும் நான் அறியாதவற்றுக்கும் இணை வைக்கும் செயலிலிருந்தும் உன்னிடம் மன்னிப்பு கோருகிறேன். (ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

# ஐயமும் தெளிவும்

**01. பள்ளியொன்று எப்போது முதல் வக்பு செய்யப்பட்டதாக கணிக்கப்படும்?**

இன்று நம் மத்தியில் பள்ளி போன்றன கட்டி முடித்து விட்டால் வக்பு செய்யும் வைபவம் என்றொன்று நடை பெறுகின்றது. அப்படியான வைபவம் நடக்கு முன் சில வேளை நாங்கள் அங்கு தொழுவதுமில்லை. ஆனால் ஒருவர் ஒரு பள்ளியை வக்புடைய நிய்யத்தோடு கட்டுவிப்பதோடு இது வக்ப் செய்யப் பட்டதாக கருதப்படுகின்றது. அல்லது குறித்த நிய்யத்தோடு கட்டிய அப்பள்ளி யில் பொதுவாகவே பாங்கு சொல்லவும், தொழுகை நடாத்தவும் அனுமதிப்பது மூலமும் அப்பள்ளி "வக்ப்" செய்யப் பட்டதென கொள்ளப்படுகின்றது. அவ்வறு கட்டப்பட்ட இடத்தை 'வக்ப்" செய்ய வென ஒரு வைபவம் வைக்க வேண்டும் என்ப தில்லை. (அஹகாமுல் மஸாஜித் பக்கம் ௩௬)

அதே நேரம் தொழுகைக்கென ஏற்படுத்தப் படும் அறை போன்றன மஸ்ஜித் என வக்ப் செய்யப் படாத வரை மஸ்ஜிதாக கருதப் பட மாட்டாது என்பதையும் இங்கு நாங்கள் அவதானிப்பது அவசியமாகும்.

## 2. போட்டிக்கு பள்ளி கட்டலாமா?

எல்லா விடயங்களிலும் போட்டி போடு கின்றோம். நல்ல விடயங்களுக்கு எல்லாம் போட்டி போடும்படியும் அவசரப் படும் படியும் குர்ஆனும் ஹதீஸும் நம்மை தூண்டுகின்றன. ஆனால் பள்ளி வாசல்கட்டுவதென்பது சிறந்த கருமமாயினும், போட்டி போட்டுக் கொண்டு ஒரே இடத்தில் அவசியமில்லாமல் பள்ளி வாசல்கள் கட்டுவ தென்பது கூடாத தாகும்.

عَنْ أَنَسٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ إِنَّ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "يَأْتِيْ عَلَى النَّاسِ زَمَانٌ يَتَبَاهُوْنَ بِالْمَسَاجِدِ ثُمَّ لاَ يَعْمُرُوْنَهَا إِلاَّ قَلِيْلاً أَوْ قَالَ يَعْمُرُوْنَهَا قَلِيْلاً" (صحيح ابن خزيمة)

“ஒரு காலம் வரும். அப்போது மக்கள் பள்ளி வாசல்களை கட்டுவதில் போட்டியிட்டுக கொள்வர். அதனை மிகவும் சொற்ப மாகவே (தொழுது, வணங்கி உயிர் பெறச் செய்து) நிர்வகிப்பர்.” என்று ரஸூல் ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் - அனஸ் ரழியல்லாஹு அன்ஹு. ஆதாரம் ஸஹீஹ் இப்னு குஸைமா)

சமூகத்தை பிளவு படுத்தி ஊரை இரண்டாக்கி விடும் வண்ணம் அமையும் பள்ளி

“அல் மஸ்ஜிதுல் ழிரார்” எனப்படு கிறது. அது பற்றிய சட்டத்தை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடு கின்றது.

وَالَّذِينَ اتَّخَذُوا مَسْجِدًا ضِرَارًا وَكُفْرًا وَتَفْرِيقًا بَيْنَ
الْمُؤْمِنِينَ وَإِرْصَادًا لِمَنْ حَارَبَ اللَّهَ وَرَسُولَهُ مِنْ قَبْلُ
وَلَيَحْلِفُنَّ إِنْ أَرَدْنَا إِلَّا الْحُسْنَى وَاللَّهُ يَشْهَدُ إِنَّهُمْ لَكَاذِبُونَ،
لَا تَقُمْ فِيهِ أَبَدًا لَمَسْجِدٌ أُسِّسَ عَلَى التَّقْوَى مِنْ أَوَّلِ يَوْمٍ
أَحَقُّ أَنْ تَقُومَ فِيهِ فِيهِ رِجَالٌ يُحِبُّونَ أَنْ يَتَطَهَّرُوا وَاللَّهُ
يُحِبُّ الْمُطَّهِّرِينَ (9:107,108)

“எவர்கள் (விசுவாசிகளுக்கு) தீங்கிழைக்கவும், நிராகரிப்பை பரப்பவும், விசுவாசி களுக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணவும், முன்னர் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருட னும் யுத்தம் புரிந்தவர்களுக்கு பதுங்குமிடமாக இருப்பதற்கும் ஓரு பள்ளியை கட்டியிருக் கிறார்களோ அவர்கள் (தம் குற்றத்தை மறைத்து விட) நிச்சயமாக நாங்கள் நன்மையை அன்றி தீமையை கருதவில்லயென்று சத்தியம் செய்கின்ற னர். ஆனால் அவர்கள் பொய்யர் என்று அல்லாஹ்

சாட்சி கூறுகின்றான். ஆகவே நபியே நீர் ஒரு போதும் அங்கு தொழவேண்டாம்.“

“ஆரம்ப நாளிலிருந்தே தக்வாவின் மீது அத்திவார மிடப் பட்ட பள்ளியில் நீர் தொழுவதே மிகவும் பொருத்தமானதாகும். பரிசுத்தமாக இருக்க விரும்பும் மனிதர்கள் அதிலே உள்ளனர். அல்லாஹ்வும் பரிசுத்தமானவர்களையே நேசிக்கி றான்.” (அல் குர்ஆன் கூ/ க0எ,க0அ)

## பள்ளியினுள் கப்ரு கட்டலாமா? கப்ரை நோக்கித் தொழலாமா?

பொதுவாக கப்ரு கட்டப்படக் கூடாது என்றே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்கள். கப்ருகளை கட்டுவதையோ, சுண்ணாம்பு மெழுகுவதையோ, அதில் உட்காருவதையோ கூடாதென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்கள். ஆதாரம் முஸ்லிம்.

ஆதலால் தான் சொந்த பூமியாக இருந்தாலும் அங்கு கப்ரு கட்டுவது மக்ரூஹ் (வெறுக்கப்படவேண்டியது) என்றும், வக்பு செய்யப்பட்ட பொதுவான இடமாயிருந்தால் அவற்றை உடைத்து எறிய வேண்டும் எனவும் புகஹாக்கள் தெளிவாக கூறியுள்ளனர். துரதிஷ்ட

வசமாக இன்று அதிகமான இடங்களில் பள்ளியினுள் கட்டப் பட்ட கப்ருகள் உள்ளன. அதன் திசை நோக்கி தொழக் கூடாதென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்துள்ளார்கள். "கப்ரை நோக்கித் தொழ வேண்டாம். அங்கு அமர வேண்டாம்." ஆதாரம் முஸ்னத் அஹ்மத், ஸஹீஹ் புஹாரி.

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையவும் அபூ பக்கர், உமர் ரழயல்லாஹு அன்ஹிமா ஆகியோரினதும் கப்ருகள் (பள்ளியினுள் தானே) உள்ளன என்றொரு சந்தேகம் தோன்றலாம். உண்மை என்னவென்றால், பள்ளியை விட்டு வேறுபட்டு தனியாகவே தான் ரவ்ழா இருந்து வந்தது. வலீத் இப்னுல் அப்துல் மலிக் (ஹிஜ்ரி அஅ-கூக) அவர்களுடைய காலத்தில் மஸ்ஜிதுன் நபி விஸ்தீரனம் செய்யப் பட்ட போது, ரவ்ழாவையும் உட்படுத்திக் கட்டி முடித்தனர். அப்படியல்லது, அது ஏற்கெனவே இருந்து வந்த ஒன்றல்ல.

## 4.கப்ருகள் இருந்த இடத்தில் பள்ளி கட்டலாமா?

காபிர்கள் அடக்கப் பட்ட இடமாயிருந்தால், அவ்விடத்தை தோண்டி அங்கு பள்ளி கட்டலாம். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

பள்ளி உள்ள இடத்தில் முஷரிக்குகளின் கப்ருகள் இருந்தன. அவை தோண்டப்பபட்டன. அறிவிப்பவர் ; அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, ஆதாரம் புஹாரி, முஸ்லிம்) அஹ்காமுல் மஸாஜித் பக்கம் 381)

அவ்வாறே தான் தேவையையும் அவசியத்தை யும் முன்னிட்டு கப்ருகளை தோண்டவோ, மட்டப் படுத்தி விட்டு அங்குஒரு பள்ளி கட்டவோ அனுமதிக்கப் பட்டுள்ளது. பொதுவாகவே ஒரு கப்ரு தோண்டும் போது எலும்புகள் ஏதும் காணப் பட்டால், அவற்றை ஒன்று சேர்த்து வேறோர் இடத்தில் புதைத்து விட வேண்டும். கப்ருகள் தோண்டப்படுவது பற்றி இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

ஷரீஅத் கூறும் நியாயமான காரணங்களுக்காக வேயன்றி கப்ருகள் தோண்டப்படலாகாது. மய்யத் உக்கிப்போய் மண்ணோடு மண்ணாக மாறி விட்டால் கப்ரை தோணடலாம். அதில் வேறொரு ஜனாஸாவை அடக்கவோ, அவ்விடத்தில் நட்டவோ, கட்டவோ பயனுள்ள ஏதேனும் செய்வதோ ஆகுமான தாகும். (ஷரஹுல் துஹத்தப் 5;303)

## 5.வக்புசெய்யப்பட்ட பள்ளியின் பொருளை விற்கலாமா?

"வக்பு" என்பது ஒரு பொருளை அல்லாஹ்வுக்காக விடப் படுவதை குறிக்கின்றது. எனவே எப்பொருளும் வக்பு செய்யப் பட்ட பின் அதில் எவரும் கையாட முடியாது. அதனை வக்பு செய்தவர் எந்த எண்ணத்தோட வக்பு செய்தாரோ அதற்கே அதனை பயன் படுத்த வேணடும்.

ஆனால் "வக்பு" செய்யப்பட்ட இடத்தை பயன் படுத்த யாரும் இல்லாததாலோ அல்லது அப்பொருள் பழுதடையும் என்பதனலோ அதனை என்ன செய்யலாம் என்றொரு கேள்வி இங்கு எழலாம். (உதாரணமாக வக்பு செய்யப்பட்ட பள்ளியின் கதவு, ஜன்னல் முதலியவை பழுத டைந்தால், அல்லது பள்ளிக்கு பக்கத்தில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றால், என்ன செய்ய லாம்?) இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில "வக்பு" செய்யப்பட்ட பொருளை விற்பதாயின், பின் வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப் படவேண்டும்.

1. விற்கப் படும் பெருள் பள்ளிக்கு பயனற்றதாக இருக்க வேண்டும்.

2. விற்கப் படுவதை விடவும் சிறந்த ஒன்றாக மாற்றப் பட வேண்டும். இந்த அடிப்டையில்

சவூதி அரேபிய சன்மார்க்க தீர்ப்புக் கான உயர் மன்றம் தீர்ப்பு (இலக்கம் ச௬௩௪, கரு0௬) வழங்கியுல்லது.

## 6. பிற வணக்க ஸ்தலங்களில் தொழலாமா?

தொழுவதற்கு பொருத்தமில்லாத (மக்ரூஹான) பல இடங்கள் ஷரீஅத்தில் விவரிக்கப் பட்டுள்ளன. அந்த வரிசையில் பிற சமய வணக்க ஸ்தலங்களும் சேர்கின்றன. உமர் ரழியல்லாஹு அவர்கள் கிறிஸ்தவர் ஒருவருக்கு கூறிய பதிலை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

“நிச்சயமாக உங்கள் வணக்க ஸ்தலங்களில் காணப்படும் சிலைகள் காரணமாக அங்கு நாங்கள் தொழ மாட்டோம்.” (ஆதாரம் புஹாரி)

இதனடிப்படையில் மற்றவர்களது வழிபாட்டுத் தலங்களில் நாம் தொழுவது மக்ரூஹ் எனக் கூறப்பட்டுள்ளது. (அஹ்காமுல் மஸாஜித் ௪அச)

## 07. காபிர்கள் பள்ளியினுள் செல்லலாமா?

பள்ளிவாசல்கள் அதற்குரிய தூய்மை பேணப் படும் போதே கண்ணியப் படுத்தப் பட்டதாக அமையும். ஆகையினால் தான் பருவமடைந்த ஒரு முஸ்லிம் முழுக்கோடு இருக்கும் நிலையில்

பள்ளிக்குள் செல்லலாகாது என கூறப் பட்டுள்ளது. ஆனால் ஒரு காபிர் பள்ளியினுற் செல்வதறகு தடையில்லை. ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்கள் முஷ்ரிக்குகளை வரவேற்று உபசரித்தது பள்ளி வாசலில் தான் என்பது வரலாற்றில் காணப்படும் உண்மையாகும். ( அல் பிக்ஹுல் இஸ்லாம் அ;ருஅ௩)

இது பற்றி சில ஹதீஸ்கள் ஸஹீஹுல் புகாரி யிலே காணப் படுகின்றன. ஷாபிஈ மத்ஹபின் பிரதான இமாம்களான இமாம் அந் நவ்வி, இமாம் அர் ராபிஈ ரஹிமஹிமல்லாஹ் ஆகியவர்களும் காபிர்களை அனுமதிக்கலாம் என்ற கருத்தையே கூறியுள்ளார்கள்.

## 8.மேல் மாடியை வீடாகவும் கீழ் மாடியை பள்ளியாகவும் பயன் படுத்தலாமா?

பள்ளிவாசல்கள் எத்தனை மாடிகளாக கட்டப் பட்டாலும் அதற்கு ஒரு பொதுவான சட்டமாகும். ஆதலால் தான் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஒரு கட்டிடத்தின் மேல் மாடியை பள்ளியாகவும், கீழ் மாடியை வீடாகவும் பாவிப்பது மக்ரூஹ் என கூறியுள்ளார்கள்.

## 9. பள்ளி வேலைகளுக்கு காபிர்களை பயன் படத்தலாமா?

பள்ளிவாசலை நிர்வாகிக்க காபிர்கள் தகுதி பெற மாட்டார்கள். அதே நேரம் பள்ளி வாசலைக் கட்ட மற்றும் வேலைகளுக்கு அவர்களை பயன் படுத்தலாம் என்பது புகாஹாக்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். யுத்த தளபாடங்கள் கூட அவர்களிடமிருந்து பெறலாம். ( தப்ஸீர் ஆயதில் அஹ்காம் க;டுளசு,ச0உ)

## 10. பள்ளிவாசலை அலங்கரிக்கலாமா?

பள்ளிவாசல்கள் எப்போதும் மனதிலே அடக்கத்தையும் பக்தியையும் ஏற்படுத்த வேண்டும். ஆனால் பள்ளிவாசல்கள் அலங்கரிக்கப் படுவதாலும், பல வர்ணங்களும், தேவைக்கதிக மின்விளக்கு அலங்காரங்களிலும் மனதில் ஏற்பட வேண்டிய பக்தியை இல்லாமல் செய்து விடுகின்றன. ஆதலால் தான் பள்ளிவாசல்கள் அலங்கரிக்கப் படுவது மக்ரூஹ் (வெறுக்கப்பட்ட செயல்) என்று கூறப்பட்டுள்ளது.

“நிச்சயமாக யூத கிறீஸ்தவர்கள் போன்று நீங்கள் பள்ளி வாசல்களை அலங்கரிப்பீர்கள்.” ஆதாரம் அபூ தாவூம்.

“இறுதி நாள் அடையாளங்களை சேர்ந்ததே மனிதர்கள் பள்ளி வாசலைக் கட்டி பெருமை பேசுவது”. ஆதாரம் அபூ தாவூத்

இந்த ஹதீஸ்களை நாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். ‘உங்கள் திருமறை மலாம் பூசப்படவும் உங்கள் பள்ளிவாசல்கள் அலங்கரிக் கப்படவும் செய்தால் உங்களுக்கு அழிவே ஏற்படும்.’ என அபு தர்தா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார் கள். எனவே பள்ளியின் சங்கையை பாதுகாக்க அலங்காரங் களை நாம் விட்டொழிக்க கடமை பட்டிருக் கின்றோம்.

## 11. அலங்காரமுள்ள முஸல்லாவை உபயோகிக்கலாமா?

தொழுகை என்பது அடக்கமும், பணிதலுமாகும் என்று ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். (ஆதாரம் திர்மிமி, நஸாஈ)

அந்த அடக்கத்தை விட்டும் வேறொன்றில் பராக்காக்கும் எப்பொருளையும் தொழுகையில் ஈடுபடுவோர் பாவிப்பது மக்ரூஹ் வெறுக்கப் பட்டதாகும்.

## 12. பள்ளிக்குள் சிறுவர்களை அனுமதிக்கலாமா?

சிறுவர்கள் சிறுபிராயத்திலிருந்தே வணக்க வழிபாடுகளில் பழகி வர வேண்டும் என விரும்பு கின்றோம். ஆதலால் சிலர் தம் சிறுவர்களையும் பள்ளிவாசல்களுக்கு தம்மோடு அழைத்துச் செல்கின்றனர். நஜீஸை பற்றிய விபரமறியாத நஜீஸ் கழிப்பவர் கள் என்று பயப்படத் தக்கவர் களை பற்றியினுற் செல்ல விடுவது மக்ரூஹ் ஆகும்.

உத்தம சஹாபாக்கள் தம் சிறிய மக்களை பள்ளிக்கு அழைத்து வருவது வழமையாக இருந்து வந்த போதும் பருவத்தை அடையாத சிறுவர்களை உள் நுழைய விடுவிவது மக்ரூஹ் என சன்மார்க்க வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

தொழுபவர்கள் முன்னால் சிறுவர்கள் ஓடித் திரிவது, சப்த மிடுவது மூலம் தொழுகையில் ஈடு பட்டிருப்பவர்கள் படும் பாடு சொல்லும் தரமன்று. அதிலும் ரமதான் காலங்களில் இதனை பள்ளி வாசல்களில அதிகமாக காணக் கிடைக்கிறது. சிறுவர்களை பள்ளி வாசலுக்கு எடுத்துச் செல்வோர் பொறுப்போடு நடந்துக் கொள்ள வேண்டும்.

## 13. பள்ளிக்கு பெண்களை அனுமதிக்கலாமா?

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து ஜமாஅத்துத் தொழுகையில் பங்கு பற்றினார்கள். இஸ்லாம் விதித்த முழு பர்தாவையும் அப்பெண்கள் அணிந்து சமூகமளித்தனர்.

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ "لَا تَمْنَعُوا إِمَاءَ اللَّهِ مَسَاجِدَ اللَّهِ" (رواه مسلم)

"அல்லாஹ்வின் அடிமைகளான பெண்கள் பள்ளிகளிலே தொழவைதை விட்டும் தடுக்கா தீர்கள்." என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் முஸ்லிம்)

இருப்பினும் இரண்டாவது கலீபா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பெண்கள் பள்ளி வாசலுக்கு வருவது பித்னாவுக்கு வழிகோளும் என்பதனால் அதனை தடுத்தார்கள். ஸஹீஹ் முஸ்லிமில் காணப் படும் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா

அவர்களின் கூற்றும் கவனிக்கப் பட வேண்டும். "அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின், பெண்கள் செய்து வரும் அலங்காரம் போன்றவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டிருப்பின் பெண்கள் பள்ளிக்கு வராது தடுத்திருப்பார்கள். (அறிவிப்பவர் உம்மு ஸலாமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். ஆதாரம் அல் முஸ்தத்ரக்)

மேற்படி கூற்றை ஊன்றிக் கவனித்தால் இன்றைய பெண் களுக்கு வேறு பதில் தேவையில்லை. இன்றைய சூழலும், வாழ்வும் பெண்கள் தம்மை அலங்கரித்து மணம் பூசிச் செல்லத் தூண்டு கின்றது. இந்நிலையில் "பெண்களுக்குத் தொழவதற்கு சிறந்த இடம் அவர்களது உள்வீடுகளாகும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய கூற்றே போதுமாகும்.

இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "உங்களில் எவரும் பள்ளிக்கு வருவதாக இருந்தால் மணம் பூச வேண்டாம்" என்று எமக்கு நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

## 14. பள்ளியினுள் சப்தமிடலாமா?

பள்ளிவாசல் இபாதத்துக்குரிய இடமாகும். தொழுவது, குர்ஆன் ஓதுவது, இஃதிகாப் இருப்பது, நன்மார்க்க விளக்க வகுப்புகள் நடாத்துவது என்பன அங்கு நடை பெற வேண்டும். அதே நேரம்தொழுபவர்களுக்கு குழப்பமுண்டு பண்ணும் விதத்தில் சப்தமிட்டு குர்ஆன் ஒதுவது கூடாத தாகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியினுள் இஃதிகாப் இருந்துக் கொண்டிருக்கும் போது சப்தமிட்டு ஓதுவதை செவியுற்றார்கள். திரையை அகற்றி, "நீங்கள் ஒவ்வொருவரும் தன் இரட்சகனோடு (அல்லாஹ்) உரையாடுகிறீர்கள் என்பதை அறியுங்கள். எனவே ஒரு சாரார் மற்றோருக்கு நோவினை செய்ய வேண்டாம். மேலும் ஓதுகின்றபோது ஒருவரை விட மற்றவர் சப்தமிட்டு ஓத வேண்டாம்." என்றார்கள். (அறிவிப்பவர் அபு சாதினில் குத்ரிய்யி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் அபூ தாவூத், நஸாஈ)

மேலே கூறப்பட்டவையல்லாமல் இன்று எத்தனையோ விதமானவைகள் ஓதப்படுகின்றன. சப்தமிடப் படுகின்றன. அவை ஸுன்னத்தை ஒட்டிய செயல்களென கூறப்பட முடியாது.

பொதுவாக பள்ளிகள் தொழுகைக்குரிய இடமென் பதால் அங்து அனுமதிக்கப் பட்ட அமல்கள் மேலே கூறப்பட்டவைகளாகும் என்பதை நாம் அறிய வேண்டும்.

## 15. பள்ளியினுள் பாட்டுப் பாடலாமா?

பள்ளிகள் கட்டப்பட்ட நோக்கத்தை முறையாக விளங்கு பவர்கள் இவ்விடயத்தில் தடுமாற மாட்டா ர்கள். இஸ்லாத்தின் ஆரம்பகாலம் தீனுக்கு ஆர்வ மூட்டும் வண்ணமும் ஏகத்துவத்தை எடுத்தி யம்பும் வண்ணமுமே பள்ளிவாசலில் நடைபெற்ற கருமங் கள் அமைந்திருந்தன. இஸ்லாத்தின் புகழை எடுத்துக் கூறி நற்குண நல்லொழுக்கங்களுக்கு அழைப்பு விடக் கூடியதாக இருந்து வந்தது.

அந்த அமைப்பில் தான் ஹஸ்ஸாஜிப்னி ஸாபித், கஃபுப்னு ஸுஹைர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இரண்டு புலவர் களது பாடல்களும் அமைந்திருந்தன. ‘ஸரஹுல் முஹத்தப்’ உ-களஎ பக்கத்தில் இமாம் நவ்வி ரஹிமல்லாஹ் அவர்கள் பின் வருமாறு கூறுகின் றார்கள். ‘இஸ்லாத்தின் புகழை பற்றியோ, நல் லொழுக்கங்கள் பற்றியோ தூண்டச் செய்யாத பாடல்கள் பள்ளியில் பாடலாகாது’. அப்படியா னவை ஹராமானதாகும்.

நவ்வி இமாம் குறிப்பிடும் இந்த விடயங் கள்தான் எமது பள்ளி வாசல்களில் நடைபெறு கின்றனவா? என்று நாம் சிந்திக்க வேண்டும். ஏகத்துவத்துக்கு முரணானது என்று சிலரும் “இல்லை” என்று மற்றும் சிலரும் கூறுமளவுக்கு கருத்து தெளிவற்றவையும் இன்று பள்ளியி னுள் சப்தமிட்டு பாடப் படுகின்றன. அத்வைதக் கொள்கை சார்ந்தவை ஓதப்படுகின்றன. நல்ல கருமம் என்ற பெயரில் செய்யப்படும் இவை பற்றிய உண்மையை ஆலிம்கள் தெளிவு படுத்தக் கடமைப் படுகின்றார்கள்.

பொருள் வாங்குவது, விற்பது, பள்ளியினுள் பாட்டுப் பாடுவது, ஜும்ஆ தொழுகைக்கு முன் வட்டமாக அமர்வது எனும் யாவையும் அல்லாஹ் வின் தூதர் நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்கள். (அறிவிப்பவர் அம்ர் இப்னு ரஜப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் அபூ தாவூத், திர்மிதி)

எத்தனை நல்ல கருத்துக்கள் உடையதானாலும் கூட தொழுகையிலிருப்பவரை சங்கடத்துக்குள் ளாக்கும் விதமாக பள்ளிலினுள் சப்தமிடலாகாது என்பது பொது விதியென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## 16. பள்ளியினுள் சாப்பாடு பறிமாறலாமா?

'நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் நாம் பள்ளிவாசலினுள் ரொட்டியும் இறைச்சியும் சாப்பிட்டு வந்தோம்' என்று அப்துல்லாஹ் இப்னு ஹர்ஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள்.

பள்ளியினுள் சாப்பாடு பரிமாறுவது தவறில்லை யாயினும் அங்கு அசுத்தமடையாது பார்த்துக் கொள்வது கடமையாகும். அதற்காக விரிப்பு வைத்துக் கொள்வது அவசியமாகும். ரொட்டி, பழவகை முதலியன சாப்பிடலாம் என அனுமதிக் கப் பட்ட அதே வேளை வெங்காயம்,வெள்ளை பூடு, முதலியன சாப்பிட அனுமதிக்கப் படவில்லை. 'வெங்காயமோ வெள்ளை பூடோ சாப்பிட்டவன் எங்களை விட்டும் ஒதுங்கியிருக்கட்டும். அல்லது எங்கள் பள்ளி வாசல்களை பிட்டும் ஒதுங்கட்டும். தன் வீட்டிலே இருந்து விடட்டும்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நாம் கவனத் தில் எடுக்க வேண்டும். ஆதாரம் இருவரும் ஒப்பியது)

இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பள்ளியினுள் சாப்பிடுவது மக்ரூஹ் எனக் கூறினார்கள்.

"அஸ்ஹாபுஸ் ஸுப்பா" எனப்படும் உத்தம ஸஹாபாக்கள் பள்ளி வாசலிலே தான் தம் உணவை பரிமாறினார்கள் என்பது வரலாறாகும்.

## 17. பள்ளியினுள் நித்திரை செய்யலாமா?

பள்ளியினுள் நித்திரை செய்வது அனுமதிக்கப் பட்ட தாகும். "அஸ்ஹாபுஸ் ஸுப்பா" (திண்ணை தோழர்கள்) உரனிய்யீன்கள், அலி ஸப்வான், இப்னு உமய்யா ரழி யல்லாஹுஅன்ஹும் போன்ற வர்கள் மற்றும் ஸஹாப்பாக்களும் பள்ளியினுள் நித்திரை கொண்டார்கள் என்பது நிரூபனமான ஒன்றாகும் என்று இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களும் பள்ளியினுள் நித்திரை செய்யலாம் என்று கூறினார்கள்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் "வாலிபர்களா யிருந்த நாம் பள்ளியினுள் நித்திரை செய்பவர்களா கவும் இருந்தோம்." அறிவிப்பவர் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆதாரம் புஹாரி.

(இரவில் தஹஜ்ஜுத் தொழுகையில் ஈடுபடு பவர்கள் ளுஹர் நேரத்திற்கு சற்று முன்பு சாய்வார்கள். அதுவே கைலூலா எனப் படுகின்றது. "நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

பள்ளியினுள் கால் நீட்டியவர்களாக மல்லாந்து படுத்திருப்பதைப் கண்டேன்" என உப்பாத்திப்னு தமீம் என்பவர் தன் சிறிய தந்தை வாயிலாக அறிவிக்கிறார்கள். (ஆதாரம் புஹாரி)

பொதுவாக இஃதிகாப் இருப்பவர்களோ, மற்றவர்களோ பள்ளியினுள் நித்திரை செய்யும் போது, தொழுபவர்களுக்கு முன்னால் இதனை செய்யாது பார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு விரிப்பை வைத்து அதில் நித்திரை செய்வ தோடு, முழுக்கு ஏற்பட்டுவிட்டால் தொடர்ந்து அங்கு இருக்காமல் வெளியேறி விட வேண்டும்.

## 18. பள்ளியினுள் வியாபாரம், விளம்பரம் செய்யலாமா?

பள்ளி வாசல்கள் வணக்க வழிபாடுகளுக்கென நிருவப்பட்ட தாகும். அங்கு வியாபார விளம்ப ரங்கள் செய்யக் கூடாது. யாராவது ஒருவர் பள்ளியில் நின்றுக் கொண்டு காணாமற் போன பொருள் பற்றி விளம்பரம்செய்வதை கண்டால், " உமது பொருளை அல்லாஹ் கிடைக்காமல் செய்து விடட்டும். ஏனெனில் பள்ளிவாசல்கள் இத்தகைய அறிவிப்புகள் செய்வதற்காக நிருவப் படவில்லை என்று கூறுங்கள்." என ரஸுலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். (ஆதாரம் ஸஹிஹ் முஸ்லிம்)

“அவ்வாறே யாராவது பள்ளியில் பொருள்கள் விற்பதையோ, வாங்குவதையோ நீங்கள் கண்டால் உமது  வியாபாரத்தில் அல்லாஹ் இலாபம் தராமலிருக்கட்டும் என்று கூறுங்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். (அறிவிப்பவர் அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு. ஆதாரம் அந் நஸாஈ)

மே ற் கூறப்பட்ட ஹதீஸ்கள் பள்ளிவாசலில் வியாபாரம், விளம்பரம் போன்றன நடைபெறக் கூடாதென அறிவிக்கின்றன.

பள்ளிவாசல்களில் நடைபெறக்கூடாத விடயங்கள் பற்றி குறிப்பிடும் அமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்கள். “இராகத்தோடு குர்ஆன் ஓதுவது, பாடல் இசைப்பது, உணவு, மருந்து, தஃவீதுகள் விற்பனை செய்வது, யாசகம் கேட்டு நிற்பது முதலியனவும், சிரிப்பூட்டக் கூடியதும், பொய்யானதுமான கதைகளைக் கூறி பிரசங்கம் செய்வதும் பள்ளியினுள் நடைபெறக் கூடாதவைகளாகும்.” (ஆதாரம் இஹ்யா உலூமித்தீன் உ- உகூரு)

இதன் மூலம் பள்ளியினுள் நடைபெறும் ஏல விற்பனை முறையும் தவிர்த்துக் கொள்ள வெண்டியது என்பதை நாம் அறியக் கடமை படுகின்றோம்.

## 19.பள்ளியுனுள் திருமணம் நடத்தலாமா?

“நீங்கள் திருமணத்தை பகிரங்கப்படுத்துங்கள். மேலும் அதனை பள்ளியிலே வைத்துக் கொள்ளுங் கள். (அதனை பகரங்கப் படுத்து மாற் போல்) அதற்காக “தப்” ரப்பான் அடியுங்கள்.” என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர், ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். ஆதாரம் திர்மிதி)

அதனடிப்படையில் தான் நிகாஹ்வை பள்ளி வாசலில் நடாத்திக் கொள்வது “முஸ்தஹப்” விரும்பத்தக்கது என்று கூறப் படுகின்றது. இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் என்பது ஒரு வணக்கமாகும். ஆகையால் தான் வணக்க வழிபாடு களுக்குரிய இடமான பள்ளியில் அது நடை பெற வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. சிலர் ‘பள்ளி யினுள் வைத்துக் கொள்ளுங்கள்’ என்ற பகுதி ஹதீஸை சேர்ந்ததல் என்றும் அல்லது இந்த ஹதீஸ் “ழஈபான” (பலஹீனமான) ஹதீஸ் என்கின்றனர்.

திருமணம் பள்ளியில் நடாத்தப் படுவது கட்டாயமான ஒரு சுன்னத்தல்ல.

இது ஒரு பிரதான சுன்னத்தாக இருப்பின், உத்தமத் தோழர் களும் இதனை நடைமுறைப் படுத்தி இருப்பார்கள். அப்துர் ரஹ்மான் இப்னு

அவ்ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது திருமணம் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அறிந்ததே நிகாஹ்வின் பிறகு தான். பள்ளியில் நடந்திருப்பின் நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்திருப்பார்கள் அல்லவா?

## 20. பள்ளியினுள் "ஹத்து" அடிக்கலாமா?

ரஸூலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகல விதமான குற்றங்களை யும் தம் பள்ளியில் வைத்து விசாரித்து தீர்ப்பு வழங்கினார்கள். ஆனால் தண்டனைகளை பள்ளி யினுள் வைத்து நிறைவேற்றப்பட வில்லை. இது பற்றி ஹதீஸ்கள் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

"பள்ளியினுள் கொலைக்கு கொலை செய்வ தையும், பாட்டுப் பாடுவதையும், ஹத்து நிறை வேற்றப் படுவதையும் நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்கள். (அறிவிப்பவர் ஹகீம் இப்னு ஹிஷாம், ஆதாரம் அபூ தாவூத்)

பள்ளியினுள் ஹத்து நிறைவேற்றப் படுவதை வன்மையாக வெறுக்கின்றேன் என இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள். தீர்ப்பு பள்ளியினுள் கூறப்பட்ட போதிலும், ஹத்தை

பள்ளிக்கு வெளியே ஒதுக்குப்புறமொன்றிலே நிறை வேற்ற வேண்டும். இத் தண்டனை நிறைவேற்றப் படும் போது பெரும் சனத்திரள் முன்னிலையில் நிறைவேற்றப் பட வேண்டும் என அல் குர்ஆன் வலியுறுத்துகிறது.

الزَّانِيَةُ وَالزَّانِي فَاجْلِدُوا كُلَّ وَاحِدٍ مِنْهُمَا مِئَةَ جَلْدَةٍ وَلَا تَأْخُذْكُمْ بِهِمَا رَأْفَةٌ فِي دِينِ اللَّهِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَلْيَشْهَدْ عَذَابَهُمَا طَائِفَةٌ مِنَ الْمُؤْمِنِينَ

(24:2)

"விபச்சாரம்செய்த பெண், ஆண் ஆகிய இவர்கள் ஒவ்வொரு வருக்கும் நூறு கசையடி கொடுங்கள். உண்மையாகவே நீங்கள் அல்லாஹ் வையும் இறுதி நாளையும் விசுவாசம் கொண்டவர் களாக இருந்தால் அல்லாஹ் விதித்த கட்டளையை நிறைவேற்றுவதில் அவ்விருவர் விடயமாகவும் உங்களுக்கு பரிவு எற்படாதிருக் கட்டும். அவ்விருவருக்கும் தண்டனை வழங்கப்படும் போது விசுவாசிகளில் ஒரு கூட்டத்தவர் அங்கு பிரசன்னமாய் இருக்கட்டும்." குர்ஆன் உச.0உ

"ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு திருடன் கொண்டு வரப்பட்டான். (குற்றம் நிரூபனமாகி) அவனது கை

வெட்டப்பட்டது. பின்னர் அதனை (மற்றவர்கள் காணும் வண்ணம்) அவனதி கழுத்தில் மாட்டி தொங்க விடுமாறு நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள்.” அறிவிப்பவர் (அப்துல்லாஹ் இப்னு ஆதாரம் திர்மிதி)

## 21.பள்ளியினுள் கதைப்பது ஆகுமா?

பள்ளிவாசலில் ஒன்றுமே பேசக்கூடாது என சிலர் நினைப்ப துண்டு. ஆனால் அது நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முறைக்கு மாற்றமானதாகும். ஸுபுஹு தொழுகையை ரஸுலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிறைவேற்றியதன் பின் சூரியன் உதிக்கும் வரை எதிர்பார்த்திருப் பார்கள். சூரியன் உதித்து விட்டால் அங்கிருந்து எழுந்து விடுவார்கள். அங்கு அவர்கள் இருக்கும் போது (தம் தோழர் களோடு ஜாஹிலிய்யாக் கால விடயங்கள் பற்றி பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தனர். ( அறிவிப்பவர் ஜாபிர் இப்னு ஸமுரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம்.)

இவ்வாறு கதைக்கலாகாது என்றிருந்தால் ரஸுலுல்லாஹி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கு கதைத்துக் கொண்டும்

சிரித்துக் கொண்டும் இருந்திருக்க மாட்டார்கள். பள்ளியினுள் கதைப்பது பற்றி குறிப்பிடும் போது இமாம் அந் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பற்றியினுள் உலக விஷயங்களோ, வேறு விடயங்களோ எந்த ஒரு நல்ல பேச்சோ பள்ளியில்பேசுவது ஆகும் என்ற தன் கூற்றுக்கு மேற் கண்ட ஹதீஸை ஆதாரமாக காட்டுகின்றார்கள். (ஷரஹுல் முஹத்தப் உ-களஎ.)

எவ்வளவு சிரித்தாலும், கதைத்தாலும் பள்ளியி னுள் தொழக் கூடிய, ஓதக் கூடியவர்களுக்கு சிரமம் ஏற்படாது பார்த்துக் கொள்வது கடமையாகும். பள்ளிக்குரிய சங்கை பேணப் படவேண்டும்.

## 22. சிறுவர்களுக்கு ஓதிக்கொடுக்லாமா?

பள்ளிவாசலை அசுத்தப் படுத்தும் சின்ன வயதுள்ளவர்கள் பள்ளியினுள் அனுமதிக்கப் பட லாகாது என்பது நாம் அறிந்ததே. அதனால்தான் சிறுவர்களுக்கு பள்ளிக்குள் ஓதிக்கொடுக்கலாகாது தடுக்க வேண்டும் என்று இமாம் கப்பால் அவர்கள் கூறியுள்ளார் கள்.

## 23. பள்ளிக்குள் போதனைகள் – தஃலீம் நடாத்தலாமா?

பள்ளியினுள் கல்வி – தஃலீம் வகுப்புகள் நடத்துவது ஏற்றமானது என்பது இமாம் நவவி

ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கருத்தாகும். கல்வியின் சிறப்புப் பற்றி வந்துள்ள அதிகமான ஹதீஸ்கள் இதனை தெறிவு படுத்துகின்றன.

“ஏதேனும் ஒன்றைக் கற்றுக் கொள்ளவோ, கற்றுக் கொடுக் கவோ யாரேனும் எமது பள்ளியினுள் நுழைவாராயின் அவர் அல்லாஹ்வின் பாதையில் புனிதப்போர் புரிபவராவார்.” என்று நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர், அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் இப்னு மாஜா)

அதே நேரம் மக்களை சிரிப்பூட்டச் செய்யவும், பொய்யான கதைகளைக் கூறவும் ஆகாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அல் குர்ஆன், அல் ஹதீஸ் போதனைகள், அகீதா, பிக்ஹு என்பனவே சமூகத்துக்கு தேவையான தாகும், பயனுள்ள தாகும் என்பதை எவரும் மறுப்பதில்லை. இத்தகைய போதனை (தஃலீம்) களே பள்ளியினுள் நடைபெற வேண்டும்.

இதை விடுத்து கட்டுக் கதைகளைச் சொல்வதோ, வாசிப்தோ கூடாததாகும். மார்க்க உபந்நியாசம் என்ற பெயரில் சிரிப்பூட்டும் கதைகளை சொல்வது தடுக்கப் படவேண்டும்.

## 24. பாங்கு சொன்ன பின் பள்ளியிலிருந்து வெளியேறலாமா?

பாங்கு சொல்லாப்பட்ட பின் பள்ளியிலிருந்து வெளியேறுவது மக்ரூஹ் ஆகும். வுழு முறிந்த தற்காக அல்லது தன்னோடு வந்தவர்கள் தன்னை விட்டும் பிரயாணமாவார்கள் என்று பயந்து அதற்காக அதற்காக பள்ளியிலிருந்து வெளி வருவதில் குற்ற மில்லை. “நாங்கள் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு அமர்ந்தி ருந்தோம். அஸர் தொழுகைக்கா பாங்கு சொல்லப் பட்டது. ஒருவர் பள்ளியிலிருந்து வெளியேறிச் சென்றார். அப் போது அபூ ஹுரைரா ‘இவர் அபுல் காசிம் (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மாறு செய்கின்றவரா?’ என்றார்கள். (அறிவிப்பவர் ஸுலைம் இப்னு அஸ்வத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம் ஷாஹுல் முஹத்தப் 2”179)

## 25. விஷேட தினங்ளுக்காக பள்ளியை அலங்கரிக்கலாமா?

வெள்ளியிரவு, இரண்டு பெருநாள் இரவு முதலியன சிறப்பான நல்லிரவுகளாகும். அதே நேரம் வேறு சில இரவுகளை வருடத்தில விஷேட இரவாகக் கணித்துக் கொண்டாடப் படுகின்றது

உதாரணமாக ஷஃபான் மாத பதினைந்தாம் நாளை நாம் எடுத்துக் கொள்ள முடியும். இது பற்றிக் குறிப்பிடும் இமாம் நவ்வி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தம் ஷரஹுல் முஹத்தப் உ/களஎம் பக்கத்தில் பின் வருமாறு கூறுகின்றார். "அதிகமான ஊர்களில் ஷஃபான் மாத பதினைந்தாம் நாள் இரவில் விளக்குகள் ஏற்றுவது போன்ற காரியங்கள் நிகழ்கின்றன. அவை வெறுக்கத்தக்க பித்அத்துக் களை சேர்ந்ததாகும். அவ்வாறு செய்யும் போது அதிகமான கெடுதிகள் உண்டாகின்றன."

நெருப்பில் கவனம் செலுத்தும், நெருப்பு வணங்கிளான மஜூஸிகளுக்கு ஒப்பாவதும், முறை தவறி பணம் வீணாக்கப் படுவதும், சிறுவர்களும் மற்றவர்களும் பள்ளியில் ஒன்று கூடி சப்தமிடு வதும், பள்ளியின் சங்கையை பேணாது நடந்து கொள்வதும், அதன் மூலம் வள்ளிவாசல் அசுத்த மடைவதுமாகிய இவைகள் எற்படாமல் பள்ளி களை பாதுகாக்க வேண்டும். (ஷரஹுல் முஹத்தப் 2/177)

அதே போன்று தான் முஹர்ரம் கூஆம் க0ஆம் தினங்களில் பள்ளிகளை அலங்கரிப்பதும் கூடாததாகும்.

# மஸ்ஜிதின் பணியை மீட்டெடுப்போமாக

நம் மீது கடமையான தொழுகை முதலிய வணக்கங்களை நிறைவேற்றுமிடமான பள்ளி வாசல்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டியன வாகும். அதிலிருந்து செயற்பட்ட முஸ்லிம் சமூகத்தின் சந்ததியினரான நாம் நம் மூதாதையர் வழியை தொடர வேண்டும்.

தீனொளி பரப்பும் இடமாக, இஸ்லாமிய ஆட்சியின் இருப்பிடமாக, ஒற்றுமைக்கு வித்திடம் தளமாக இருந்து வந்த மஸ்ஜிதுகளின் தூது மீண்டும் ஒளி பெறவேண்டும். சன்மார்க்க போதனைகள் நடைபெறும் இடமாக அவை மிளிர வேண்டும்.

"பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கென்றே நிர்மானிக்கப் படுகின்றன." என்ற குர்ஆனின் வசனம் தரும் போதனை எனறென்றும் நிலைத்திருக்க செயற்படுவோமாக. கட்சியோ, இயக்கமோ பள்ளிவாசலின் பணியில் ஊடுருவா மல் காப்பது எல்லோரதும் கடமையாகும்.

நம் மூதாதையர் எந்த முறையில் பள்ளி வாசளை பயன் படுத்தப்படுத் தினார்களோ அதே முறையில் பயன்படுத்த முயல்வோமாக.

## لا يصلح آخر هذه الأمة إلاَّ ما أصلح أولها

"எந்த ஒன்றின் மூலம் இந்த சமூகத்தின் முன்னையவர்கள் சீர்திருத்தம் கண்டனரோ, அவ்வழி மூலம் அன்றி இந்த உம்மத்தின் பின்னையவர்கள் சீர் திருத்தம் காண மாட்டார்கள்" என்று இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அலைஹி அவர்கள் கூறிய கூற்றை நினைவில் கொண்டு செயற்படுவோமாக.

**والله ولي التوفيق**

**وصلى الله على نبينا محمد وآله وصحبه أجمعين.**

**உசாத்துனை**


1. அல் குர்ஆன்
2. ஸஹீஹுல் புஹாரி
3. ஸஹீஹுல் முஸ்லிம்
4. ரியாழுஸ் ஸாலிஹீன் – இமாம் அந் நவ்வி
5. ஷரஹுல் முஹத்தப் – இமாம் அந் நவ்வி
6. இஃலாமுஸ் ஸாஜித் பி அஹகாமில் மஸாஜித்-முஹம்மத் பின் அப்தில்லாஹ் அஸ் ஸர்கிசீ
7. பதாவா அல் அஜ்னதுத் தாஇமா – ஹைஅத் கிபாரில் உலமா
8. அல் பிக்ஹுல் இஸ்லாமீ – வஹ்பா அஸ் ஸுஹைலி
9. அல் மஸ்ஜிது பில் இஸ்லாம் – கைருத்தீன் வாஇலீ
10. ஆஸாருல் மதீனதில் முனவ்வரா – அப்துல் குத்தூஸ் அல் அன்ஸாரி